ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

July - September 2003
சுபானு ஆடி-புரட்டாதி 2003
இலவச வெளியீடு
2000 பிரதிகள்



சேக்கிழார் சிறப்பு மலர்

# MEGA BANQUET HALL

## மேஹா பார்ட்டி ஹால்


உங்கள் இல்லங்களில் நிகழும் அனைத்து
வைபவங்களையும் சிறந்த முறையில்
நடாத்தி முடிக்க நகரில் அழகிய மண்டபம்

**50 பேர் முதல் 500 பேர் வரை**

திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்த நாள்
மற்றும் எந்தவித
வைபவங்களுக்கும்
அறுசுவை உணவுகளுடன்
ஆடம்பரமாகக் கொண்டாட
எம்மிடம் தகுந்த **Package** உண்டு

**TEL: 416-457-8224**
**492-5589**

**3330 Pharmacy Ave., Scarborough, ON**
**(Pharmacy / MeNicoll)**



உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம்: 1948

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 4: இதழ் 2

சுபானு வருடம்
ஆடி - புரட்டாதி
திருவள்ளுவர்
ஆண்டு
2034

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON.
M1E 3E4
Tel: (416) 724-6240

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம் 2
2. தில்லைபாதி திருவாசகத்தில் 3
3. நகுலேஸ்வரம் 8
4. எல்லாம் உன் விருப்பம் 12
5. தவத்திரு வடிவேற் சுவாமிகள் 13
6. முக்குணங்களிலிருந்தும் விடுதலை – கீதை 17
7. ஊரார் மகன் 21
8. Pada Yathra to Kathirgamam 24
9. சைவத்திருமுறை முற்றோதுதல் ஓர் பார்வை 27
10. சரவணமுத்துச் சுவாமிகள் 32
11. அஞ்சலிகள் 36
12. சமயச் செய்திகள் 38
13. தனக்குவமை இல்லாதான் 40
14. ஹரன் சுவாமிகளுக்கு மணிவிழா 42
15. புரட்டாதிச்சனி விரதம் 46
16. மாதச் சிறப்புகள் 48
17. இந்து சமயப் பேரவைச் செய்திகள் 49
18. சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் 52

# சேக்கிழார் பெருமான்

சேக்கிழார் பெருமானின் நினைவு கனடாவில் இந்நாட்களிற் பெருமளவு வளர்ந்து வருகின்றது. வருடாந்தக் குருபூசைகளுக்கு மேலாக அவருக்கு ஒரு பெரிய விழாவினையே இந்து சமயப் பேரவை இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் 6ம் திகதிகளில் ரொறன்ரோ நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நடத்தி முடித்திருக் கின்றது. தாயகத்திலிருந்து சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தார்கள்.

விழாபற்றிய விவரமான செய்தி இவ்விதழின் பிறிதோர் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

சேக்கிழார் பெருமான் சைவத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு தாமும் பல ஆய்வுகளை மேற்கொண்டு நாயன்மார்களின் வரலாறுகளைப் பத்திச்சுவையுடன் பெரியபுராணமாகப் பாடிய இணையற்ற புலவர் சேக்கிழார்.

நாயன்மார்களின் வரலாறுகளோடு தமிழ்நாட்டின் இயற்கை வளம், தமிழர் பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றையும் பதிவு செய்து பழந்தமிழ் நாட்டைக் கண்முன் நிறுத்துகின்றார் புலவர்.

தொண்டர் சீர்பரவி தொண்டு நெறியே சைவநெறி என்றும் அத்தொண்டுக்கு ஆதாரமாக இருப்பது அன்புணர்ச்சி என்றும் வலியுறுத்தியதோடு சைவசித்தாந்த தத்துவங்களையும் விளக்கிச் சைவ உலகத்தை வழிப்படுத்திய - இன்றும் வழிப்படுத்திக் கொண்டிருக்கும் சேக்கிழார் பெருமானின் தொண்டைக் கனடியத் தமிழருக்கு உணர்த்தும் வகையில் விழா எடுத்த இந்து சமயப் பேரவையை 'ஆத்மஜோதி' வாழ்த்தி அதிக பக்கங்களோடு கூடிய இச்சிறப்பு மலரைச் சேக்கிழார் பெருமானுக்குச் சமர்ப்பித்து வணக்கம் செலுத்துகின்றது.

வாழ்க சேக்கிழார் தொண்டு!
வளர்க தொண்டுணர்வு!

- வி. கந்தவனம்

# தில்லைபாதி திருவாசகத்தில்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

தமிழ்ச் சமுதாய மத்தியிலே 'ஆடைபாதி ஆட்பாதி' யென்ற பழமொழி புழக்கத்தில் உள்ளது. இது எதைக் குறிக்கிறது எனின் உடையின் முக்கியத்துவத்தையே குறிக்கின்றது. 'இரக்கப் போனாலும் சிறக்கப்போ' என்ற பிரயோகமும் உடுப்பின் உயர்வையே சுட்டிக் காட்டுகிறது. பழமொழி நானூற்றில் 'உடுத்தாரை உண்டி வினவுவார் இல்' என்ற தொடரும் ஆடையின் ஆளுமையை வியந்தோதுகிறது. எடுப்பான உடைக்கும் எழிலான தோற்றத்துக்கும் எக்காலமும் செல்வாக்கு உண்டு. பெருந்தலைவர் காமராஜரின் தூய வெண்ணிறக் கதராடை ஒரு கணிப்பை நல்கிறது. காந்தியின் எளிமையான உடை தான் அவர்க்கு உயர்வளித்தது. எது எப்படியாயினும் புனிதமாய் உடை உடுக்க வேண்டும் என்பதைக் 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற பழமொழி எடுத்துக் காட்டுகின்றது. இப்பாதியென்ற பிரயோகம் பல இடங்களிலே பிரயோகிக்கப்படுகிறது. இறை வனையே அர்த்தநாரீஸ்வரர் வடிவில் திருமுறைகள் காட்டும்.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
    ஞால நின்புக ழேமிக வேண்
    ஆலவாயில் உறையுமெம் மாதியே.

- சம்பந்தர் 3:108.1

புதுவிரி பொன்செ யோலை யொருகாதொர் காது
    சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத
    மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்
    குழல்பாக மாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள்வண்ண வண்ண
    மெழில்வண்ண வண்ண மியல்பே

- அப்பர் 4: 8.10

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமுமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ

மணிமொழியார் - திருவாசகம் 10-18

இந்தப் பாணியைச் சிறிது மாற்றிப் பாடிய நக்கீர தேவநாயனார் தந்த கைலைபாதி காளத்தி பாதியென்ற பிரபந்தம் பதினோராந் திருமுறையில் அமைந்துள்ளது. திருக்காளத்தியைத் தென்கைலை எனவும் அழைப்பர். ஒருபாடல் கயிலையைப் பற்றி வர, மற்றது காளத்தி பற்றி வரப் பாடப்பட்டுள்ளது. இது அந்தாதியாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எல்லாப் பாடல்களும் வெண்பா யாப்பில் அமைந்தவை.

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.

பெற்ற பயன்இதுவே அன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ் சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்
காளாகப் பெற்றேன் அடைந்து.

- கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 1,2

பாதித் திருவுருப்பச் சென்றிருக்கும் பரமனைப் படம் பிடித்துக் காட்டும் இவ்வந்தாதிக் கவிப் பெற்றி சொல்லுந்தரமன்று

இடப்பாகம் நீள்கோட் டிமவான் பயந்த
மடப்பாவை தன்வடிவே ஆனால் - விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெங் காளத்தி ஆள்வார்க்
கொருவடிவே அன்றால் உரு.

- மேலது 6

ஆழ்வார்கள் கூடச் சிவனை வலப்பால் வைத்த திருமாலை அழகாகப் பாசுரஞ் செய்துள்ளனர்.

வலத்தன் திரிபுர மெரித்தவன்
　　இடம்பெறுத் துந்தித்
தலத்து எழு திசைமுகன் படைத்தநல்
　　உலகமும் தானும்
புலப்பட பின்னும் தன் உலகத்தில்
　　அகத்தனன் தானே
சொலப்புகில் இவைபின்னும் வயிற்றுள
　　இவையவன் துயக்கே.

- திருவாய்மொழி 1: 3.9

உடம்பினால் குறைவில்லா
　　உயிர்பிரிந்த மலைத்துண்டம்
கிடந்தனபோல் துணிபலவா
　　அசுரர் குழாம் துணித்துகந்த
தடம்புனல் சடைமுடியன்
　　தனியொருகூ றமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத
　　உயிரினால் குறைவிலமே.

- மேலது 4:8.10

இப்படி ஒரு பாடலையே பாதி பாதியாய்ப் பாடியவர்கள் இரட்டையர்கள். இப்படி ஒப்பீடு பண்ணிய கலைமாச் செல்வர்கள் பிள்ளைபாதி, புராணம் பாதியெனப் பெரியபுராணத்தை வர்ணிக் கிறார்கள். இங்கே பிள்ளையென்றது சீர்காழிப்பிள்ளையான திருஞானசம்பந்தப் பெருமானையே குறிக்கும். இப்பார்வையிலே திருவாசகம் கூடத் தில்லைச் சிற்றம்பலவனையே பாடுந் திறத்தால் அரைவாசிப் பதிகங்கள் தில்லையைப் பற்றியே பாடக் காணலாம். ஐம்பத்தொரு திருப்பதிகங்களில் இருபத்தைந்து தில்லை பற்றியே பேசுவதால் - திருவாசகத்தில் தில்லை பாதியென்ற பிரயோகம் வந்துளது. இவ்வாறு அமைந்த பதிகங்கள் வருமாறு:

| | |
|---|---|
| கீர்த்தித் திரு அகவல் | கோயில் மூத்த திருப்பதிகம் |
| திருவண்டப் பகுதி | கோயில் திருப்பதிகம் |
| போற்றித் திருஅகவல் | கண்டபத்து |
| திருப் பொற்சுண்ணம் | அச்சப்பத்து |
| திருக்கோத்தும்பி | குலாப்பத்து |
| திருத் தெள்ளேணம் | எண்ணப்பதிகம் |

| | |
|---|---|
| திருச் சாழல் | யாத்திரைப்பத்து |
| திருப்பூவல்லி | திருப்படையெழுச்சி |
| திருவுந்தியார் | திருப்படையாட்சி |
| திருத்தோணோக்கம் | ஆனந்தமாலை |
| திருப்பொன்னூசல் | அச்சோப்பதிகம் |
| அன்னைப்பத்து | |
| குயிற்பத்து | திருச்சிற்றம்பலக் கோவையார் |
| திருத்தசாங்கம் | 25+1=26 |

பெரும்பாலும் திருப்பெருந்துறையை மையமாக எழுந்த பதிகங்களிலும், மற்றும் திருவாரூர், உத்தரகோசமங்கை - அண்ணாமலை, திருக்கழுமலம் போன்ற தலப்பதிகங்களிலும் சிதம்பரம் பேசப்படாமல் இல்லை. சில காண்பாம்:

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

- சிவபுராணம் வரி 90

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலை

- திருச்சதகம் 31

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற்போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி....

- மேலது 100

இவ்வண்ணம் திருவாசகக் கண்ணோட்டம் அமையினும் திருவாசகப் பொருளாய் அமைந்தவன் தில்லை நடராஜனே என்று கூறி அவனோடு கலந்தவர் மாணிக்கவாசகர் என்பதைத் திருவாதவூரடிகள் புராணம் கூறுகிறது.

செய்காட்டுங் கழுகடவித் தில்லையுளார் பொருள் கேட்க
கைகாட்டித் தம்முருவங் காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையர் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராக்கினார்.

சிவப்பிரகாச சுவாமிகளும் மாணிக்கவாசக நின்வாசகமே

வாசகம் அதற்கு வாச்சியம் தூசகல் அல்குல் வேய்த் தோளிடத்தவனே என்று பாடியுள்ளார்.

கூத்தப் பிரானே தன்கைப்பட எழுதி அழகிய சிற்றம்பலம் உடையான் எனக் கைச்சாத்திட்டு இலச்சினை பொறித்த திருவாசகத்தை நாளும் பொழுதும் பாராயணஞ் செய்து ஆண்டவனோடு ஐக்கியம் அடைவோமாக!

கடையூழி வருந்தனிமை கழிக்க அன்றோ அம்பலத்துள்
உடையாருள் வாசகத்தின் ஒருபிரதி கருதினதே.

- மனோன்மணியம்

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே.

- திருமந்திரம்

**THE CHILDREN'S EDUCATION TRUST OFCANADA**

**NON PROFIT .FOUNDATION**

**குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா**

**இலாப நோக்கற்ற நிறுவனம்**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும்
அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம்.
இலாப நோக்கற்ற மூலத்தாபனம்.
இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai** (Division Director)

சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற
தொடர்பு கொள்ளுங்கள்:



சிவா கணபதிப்பிள்ளை

Bus: 416 -438 -0660 / 416-438-3578
Res: 905 -472-1139 Call: 416-899-6044
FAX: 416 -438 -8532
1200 Markham Rd., Suite 301, Scarborough, Ontario M1H 3C3

## ஈழத்துத் திருத்தலங்கள் - 4

# நகுலேஸ்வரம்

திருமதி சுந்தரகலாவல்லி சிவபாதசுந்தரம், (B.A. Cey.)

### கடந்த இதழ் தொடர்ச்சி:

பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளில், இத்தலத்தின் பெருமை அறிந்து கொண்ட சோழவம்ச இளவரசர்கள் இங்கு வந்து இத் தலத்தை வழிபட்டதுடன், இங்கிருந்த சிவாலயத்தை புனருத் தாரணம் செய்யும் திருப்பணிகளுக்கும் உதவினர். அவ்வண்ணமே யாழ்ப் பாணத்தை ஆண்டு வந்த ஆரியச் சக்கரவர்த்திகளும், இவ்வாலய வளர்ச்சிக்கு உதவிகள் செய்து வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த அரசர்கள் இவ்வாலய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கி யுள்ளதை, போர்த்துக்கேயரின் ஆவணங்களிலிருந்து தெரிய வருகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலை, தட்சணகைலாச புராணம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், போன்றவற்றிலிருந்து இத்தலம் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளலாம். இத்தலத்தின் பெருமைகளையும் மேன்மைகளையும், விளக்கும் பல இலக்கியங்கள் பல்வேறு காலங்களில் எழுந்துள்ளன. மாதகலைச் சேர்ந்த ஏரம்பையர் (1847-1914) என்பவரால் நகுலேச புராணம் பாடப்பட்டுள்ளது. இதுவே தலபுராணமாக அமைந்துள்ளது.

அத்துடன் நகுலேச்சர மான்மியம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலேஸ்வர பூங்கொத்து, நகுலேசர் ஊஞ்சல், நகுலேஸ்வரர் சதகம், என்பவையும் குறிப்பிடத்தக்க இலக்கியங்களாகும்.

நகுலேஸ்வரத்தில் ஆரம்பத்திலிருந்த கோயில் கடல்கோள் ஏற்பட்டபோது கடலுள் அமிழ்ந்து விட்டது என்று அறிய முடிகிறது. அதன் பின் எஞ்சியிருந்த மலையின்மேல் சிவலிங்கம் ஒன்றை வைத்து வழிபட்டனர். அச்சிவலிங்கம் இப்போதும் சடையம்மா மடத்தின் பக்கத்தில் இருக்கின்றது. இதனருகே நன்னீர்ச்சுனை ஒன்றும் இருக்கின்றது. கடல்கோள் கொண்டிருப்பினும் இவ் வாலயத்தின் தொல்பொருட்கள் எதுவும் இதுவரை கண்டெடுக்கப்பட வில்லை.

முற்காலத்தில் இக்கோயிலின் பரிபாலனத்தையும் வழிபாட்டு முறைகளையும் கவனித்தற் பொருட்டு கோயிற் கடவையில் அக்கிரகாரம் ஒன்று இருந்தது என்றும், அங்கு வாழ்ந்த அந்தணப் பெருமக்கள் நீலகண்ட ஆச்சாரியாரின் பரம்பரையினர் என்பதும்

மரபுவழி வரலாறாகும். நகுலேஸ்வர சிவன் ஆலயம் சிறந்த கட்டிடக் கலையைக் கொண்டிருந்ததாயும் மூன்று பிரகாரங்கள், ஐந்து கோபுரங்கள் இருந்ததாகவும் நம்பப்படுகின்றது.

கடற்கோள் ஏற்பட்டபின் அமைக்கப்பட்ட சிவன் ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. பூசைகள் யாவும் சிறப்புற நடந்து வந்தன. ஆனால் இந்நிலை நீடிக்கவில்லை. ஈழத்தில் அந்நியர் காலடி வைத்ததினால், அவர்கள் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன், சைவாலயங்களை அழித்தனர். அவ்விதம் அழிக்கப்பட்ட ஆலயங்களில் நகுலேஸ்வரமும் ஒன்று. கி.பி. 1621ம் ஆண்டில் போர்த்துக்கேயரால் இவ்வாலயம்முற்றாகத் தரைமட்ட மாக்கப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலத்திலும் நகுலேஸ்வரப் பெருமானுக்கு ஒழுங்காகப் பூசைகள் நடைபெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஈழத்தில் சைவசமயத்திற்கு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் தமிழும் சைவமும் வளர்ச்சி யடையத் தொடங்கின. அவர் மறைந்த ஈச்சரங்களை புனருத் தாரணம் செய்ய வேண்டும் என்று மக்களின் சமய உணர்வுகளைத் தட்டி எழுப்பினார். நகுலேஸ்வரம் சிவன் கோயிலையும் புனருத்தாரணம் செய்யும் முயற்சியில் இறங்கினார். இவரின் சரித்திரத்திலிருந்து இவர் இவ்வாலயத்திற்காகச் செய்த தொண்டின் சிறப்பினை அறிய முடிகிறது.

நாவலர் பெருமான் கீரிமலைச் சிவன்கோயிலைக் கட்டி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வதற்குரிய சுபநேரத்தையும் இடத்தையும் தெரிவு செய்வதற்காக சோதிட வல்லுநர் நல்லூர் இரகுநாத ஐயருடனும் அராலி சிவாச்சாரியார் சுவாமிநாதருடனும் இணைந்து கலந்தாலோசித்து, இத்திருப்பணியை ஆரம்பிக்க வசதிகள் செய்தார். பல சைவப்பெரியார்களின் ஆக்கமும் ஊக்கமும் சேர, கோயில் கட்டிட வேலைகள் ஆரம்பமாயின. திருப்பணி வேலைகள் நிறைவேறியதும், கி.பி. 1895ம் ஆண்டு மன்மத வருடம் ஆனிமாதம் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. பூசைகள் வழிபாடுகள் சிறப்புற நடைபெற்று வந்தன. ஆனால் துரதிஷ்டவசமாக 1918ம் ஆண்டில் தற்செயலாக இடம்பெற்ற சம்பவத்தில் கோயில் தீப்பற்றியது. தொடர்ந்து புனருத்தாரணம் செய்யப்பட்டது. 1953ம் ஆண்டில் ஒரு கும்பாபிஷேகம் இடம் பெற்றது. பின்னர் 1973ம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

புனருத்தாரணத்தின்போது இக்கோயில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் மகாமண்டபம், நிருத்த மண்டபம், கோபுரவாயில், பரிவார தெய்வங்களின் கோயில்கள் என்பன சிற்ப சாஸ்திர முறைக்கேற்ப, தென்னிந்தியா விலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பாசாரியார்களைக் கொண்டு கட்டப்பட்டன. இக்கோயிலின் அடித்தளம் வெள்ளைக் கல்லினால் அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட தூண்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. விமானத் தளங்களும் வெள்ளைக் கல்லினால் ஆக்கப்பட்டவையே. இவ்வாலயத்தில் சிவனின் திருவுருவங்களாகிய தட்சிணாமூர்த்தியும் இலிங்கோற்பவரும் சிறப்பாக அமைக்கப்பட்டன. அத்துடன் விநாயகர், முருகன், சோமஸ்காந்தன், விஷ்ணு, மகாலட்சுமி, பஞ்சலிங்கங்கள் என பரிவார தெய்வங் களுக்கும் சிறு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. நவக்கிரக வழிபாட்டிற்கும் அழகிய முறையில் இடம் அமைக்கப்பட்டது. மகோற்சவ காலத்துக்கென பஞ்சலோகங் களால் ஆன திருவுருவங்களும் செய்யப்பட்டிருந்தன. நிருத்த மண்டபத்தில் நடராசர் திருவுருவம் அமைக்கப்பட்டது.

இவ்விதம் அழகுற அமைக்கப்பட்ட ஆலயத்தில், நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக இடம்பெற்றன. சைவசமயத்தில் கூறப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் விசேட விரதங்கள் யாவற்றிற்கும் சிறப்பான விழாக்கள் எடுக்கப்பட்டன. இவ்வாலயத்தில் சிவனுக்குரிய மகோற்சவம் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இடம்பெறும். அம்மனுக்குரிய மகோற்சவம் பங்குனி மாதத்தில் தொடங்கி சித்திரை புதுவருடத்துடன் தேர், தீர்த்தத் திருவிழாக்களுடன் முடிவடையும். இங்கு புராணபடனம் ஓதுதலும் நடைபெற்று வந்தது. அடியார்கள் வசதி கருதி பல மடங்களும் அமைக்கப்பட்டன.

இவ்விதம் மறுமலர்ச்சி கண்ட ஆலயம் மீண்டும் 1990ம் ஆண்டில் பெரும் அழிவைச் சந்தித்தது. ஈழத்தில் இடம்பெற்று வந்த அரசியல் நிலை காரணமாக, இராணுவ நடவடிக்கையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. 1990ம் ஆண்டு அக்டோபர் 16ம்திகதி கேதாரகௌரி விரதத்திற்கான பூசைகள், உற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அடியார்கள் கூடிநின்று வழிபட்டுக் கொண்டிருந்த வேளை, இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஆலயத்துக்குப் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் நகுலேஸ்வரப் பெருமானின் அருளின் மகிமையால் மூலஸ்தான சிவலிங்கப் பெருமானுக்கு சேதங்கள் ஏற்படவில்லை. இத்தாக்குதல் நடவடிக்கையுடன் மக்கள்

அன்றே இடம்பெயர்ந்தார்கள். பூசை வழிபாடுகள் தொடர்ந்து இடம்பெறவில்லை. இவ்வாலயத்துக்கும் கீரிமலைத் தீர்த்தத்திற்கும் மக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவ்விதம் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் இவ்வாலயம் கைவிடப்பட்ட நிலையில் இருந்துள்ளது.

நாவலர் பெருமான் சைவசமயத்திற்கு ஆற்றிய பணியைப் போல் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களும் சமயப்பணிகளில் ஈடுபட்டுள்ளார். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக இவ்வாலய பரிபாலனம், வழிபாட்டு ஒழுங்குகளைச் சிறப்புற செய்து வந்துள்ளார்; செய்து வருகிறார். இவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால், 1998ம் ஆண்டிலிருந்து கோயிற் பூசைகள் இடம்பெற ஆரம்பித்துள்ளன. திரும்பவும் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியுள்ளது தெரிந்ததே. அரசாங்கத்தினால் வழங்கப்படும் புனருத் தாரண நிதியைப் பெற்றுத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அது மட்டுமல்ல அவர் புலம்பெயர்ந்து வாழும் சைவமக்களுக்கு விடுத்த வேண்டு கோளுக்கிணங்க, இத்திருப்பணியில் பங்கு கொண்டு உதவிகள் செய்ய பலர் முன்வந்துள்ளார்கள்.

1982ம் ஆண்டில் இவ்வாலயத்துக்கான 108 அடி உயர இராஜகோபுரம் கட்டி எழுப்பும் பணி ஆரம்பமானது. ஆனால் 16 அடி உயரம்வரை கட்டப்பட்ட நிலையில் இது தடைப்பட்டிருந்தது. இந்த இராஜகோபுரத்தை தொடர்ந்து திட்டமிட்டபடி 108 அடி உயரமானதாக, 9 தளங்களுடையதாக, 9 கலசங்களுடன் அழகிய சிற்ப வேலைகளடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயத்தின் மூலமூர்த்தியைத் தவிர, முன்பிருந்த விக்கிரகங்கள் யாவும் மறைந்துவிட்டன. தற்பொழுது நவீன முறையில், திட்டமிட்டபடி ஆகமமுறைகளுக்கேற்ப இக்கோயிலைக் கட்டி எழுப்பும் முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. கொடித்தம்பங்கள் பரிவாரமூர்த்திகள், இரதங்கள், வாகனங்கள், கண்டாமணி யாவுமே புதிதாகச் செய்யப்படவுள்ளன. இவை யாவும் விரைவில் பூர்த்தியாகி மகாகும்பாபிஷேகம் இடம்பெறும் என்பது சைவப் பெருமக்களின் நம்பிக்கை.

நகுலாம்பிகை சமேதராய் நகுலேசப் பெருமானின் அருளாட்சி யின் சிறப்பினால் மீண்டும் இவ்வாலயம் பொலிவுறும் காலம் கிட்டியுள்ளதை நினைந்து மகிழ்வடைவோம்.

(தகவல்: நகுலேஸ்வர ஆதீனகர்த்த பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் - பவழவிழா மலர்.)

# எல்லாம் உன் விருப்பம்

கலைமாமணி, ஆய்வறிஞர், ஆசுகவிப் பேரரசு
**பழனி இளங்கம்பன்**



மணலாய் என்னை நீவைத்தாய்
மகிப அதுவோ உன்விருப்பம்
மலையாய் என்னை நான் நினைத்தால்
மகிழ்வும் அதிலே தோன்றிடுமோ?

தினையாய் என்னை நீவைத்தாய்
தேவா! அதுவே உன்விருப்பம்
பனையாய் என்னையான் நினைத்தால்
பரவசம் அதிலே வாய்த்திடுமோ?

துரும்பாய் என்னை நீவைத்தாய்
தூயோய் அதுவே உன்விருப்பம்
பெரும்தூ ணாய்எனை நான் நினைந்தால்
பேசும் இன்பம் கிடைத்திடுமோ?

அரும்பாய் என்னை நீவைத்தாய்
ஐயா! அதுவே உன்விருப்பம்
அரும் மலராக எனை நினைத்தால்
அதிலே அமைதியும் வருமாமோ?

மின்னாய் என்னை நீவைத்தாய்
மேலோய் அதுவே உன் விருப்பம்
பொன்னாய் என்னை நான் நினைத்தால்
பொருந்தும் பொருளும் உண்டாமோ?

உன்விருப் பத்தில்தான் எல்லாம்
உண்மை அதனை நான் அறிந்தே
என்னை மறந்தே யான் வாழ
எந்தாய் அருள்வாய் அருள்வாயே!

### வன்னி கிளிநொச்சி மாவட்ட மகாதேவ ஆச்சிரம

# தவத்திரு வடிவேற் சுவாமிகள்

சிவநெறிக்கலாநிதி புலவர் விசுவாம்பா விசாலாட்சி அம்மையார்

கிட்டத்தட்ட 80 வருடங்களுக்கு முன் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் கூட்டத்தில் தானுமொருவனாக யாழ்ப்பாணச் சித்தர் யோகசுவாமிகளிடம் ஆசிபெறச் சென்றான். சுவாமிகளை அச்சிறுவன் வீழ்ந்து வணங்கி, இருகண்களாலும் கண்ணீர் பெருக நின்றான்.

சிவயோக சுவாமிகள் சிறுவனின் பக்குவநிலை கண்டு ஏதும் பேசாதிருப்பார். சிறுவனும் நாள்தோறும் சுவாமிகளைத் தரிசிக்கத் தவறியது கிடையாது. ஒருநாள் சுவாமிகள் "ஏனடா என்னிடம் வந்து காலம் கழிக்கின்றாய். இங்கை கிட்டவா எனச் சிறுவனைப் பக்கத்தில் நிறுத்தி, "தம்பி உன்னுடைய அவாவை நிறை வேற்றவென ஒருவர் கந்தர்மடத்தில் வேதாந்த மடத்தில் இருக்கின்றார். அவரிடம் நீ நேரே போ. அவரிடம் உனது விருப்பத்தைத் தெரிவிப்பாயானால் உனது அவா தீர அவர் பெரிதும் உதவுவாரெனத் திருவாய் மலர்ந்தார்கள்.

சிறுவனுக்கு விபரிக்க முடியாத மகிழ்ச்சி பெருகியது. பேரானந்த கடலில் மிதப்பது போலச் சிறுவனின் உணர்ச்சி காணப்பட்டது. இந்த நல்ல செய்தியைக் கூறிய சுவாமிகளின் பாதமலரடிகளைப் பலமுறை சுற்றிச் சுற்றி வணங்கி கண்ணீர் மழையால் சுவாமியின் பாதங்களை அபிடேகித்தான். பின்னர் நன்றியுணர்ச்சியுடன் சுவாமிகளைப் பிரிந்து வேதாந்த மடம் சென்றான்.

முன்பு ஒரு காலத்தில் ஸ்ரீ இராமக்கிருஷ்ண சுவாமிகள் தனக்கோர் உத்தம சிஷ்யன் வரப் போகிறான் என்று திருஷ்டியால் உணர்ந்து எதிர்பார்த்திருந்தது போல, கந்தர் மடத்து வேதாந்த மகாதேவ சுவாமிகளும், இன்று தன்னிடம் உத்தம சீடன் ஒருவன் வருவானென எதிர்நோக்கி இருந்தார்.

சிறுவன் பயபக்தியுடன் குருவான மகாதேவா சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். தனது விருப்பங்களைத் தெரிவித்தான். சுவாமிகள் அச்சிறுவனை நோக்கி தாய் தந்தை ஊர் பேர் யாவும் கேட்டறிந்தார். பின்னர் உமது பெற்றாரின் அனுமதி பெற வேண்டும். நல்ல அறிவைத் தேட வேண்டும் என்று கூறினார்.

சுவாமிகளின் பணிப்பைச் சிறுவன் சிரமேற்கொண்டு பொன்னே போற் போற்றினான். சமயக் கல்வியை மகாதேவா சுவாமிகளிடம் பெற்றான். சமயக்கல்வி வேதாந்த நூல்கள் முழுவதும் சந்தேகமறக்

கற்றான். மற்றும் இலக்கியக் கல்வியைத் தாய்தந்தையர் மேற் பார்வையில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கற்றான். அதன்பின் தனது இருபதாவது வயதில் துறவு பூண்டு சந்நியாசம் பெற்றான்.

இவர் தான் மகா சமாதியடைந்த வடிவேற் சுவாமிகள். இவர்கள் இணுவிலில் பராபவ ஆண்டு வைகாசித் திங்கள் 1906ம் ஆண்டு உரோகினி நட்சத்திரத்தில் தோன்றினார்.

இவருடைய பெற்றோர்க்கு ஆறு பெண்பிள்ளைகள் இருந்தார்கள். கொள்ளி வைக்கக்கூட ஆண்பிள்ளை இல்லையே என இணுவில் கந்தனை நினைந்து கடுந்தவம் புரிந்தார்கள். ஒருநாள் இரவு தங்கவேல் ஒன்று தமது கையில் இருக்கத் தாயார் கனவு கண்டார். இணுவில் கந்தப் பெருமானருளால் ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு 'வடிவேல்' என நாமம் சூட்டினார்கள்.

செந்தாமரை மலர் போன்ற சிவந்த மேனியராகத் தோன்றிய வடிவேல் அவர்கள் முருகப் பெருமான் அருளால் மிகவும் இளம் வயதில் இல்லறம் நாடாது துறவறம் நாடி சந்நியாசம் பூண்டார்.

கிறீஸ்தவ மதம் காட்டுத் தீ போன்று பரவிய காலத்தில் தவத்திரு வடிவேற்சுவாமிகள் கிராமங்கள், நகரங்கள், மலைநாடுகள் தோறும் பெரியபுராணம், திருமுறைகள் என்பவற்றை இசைக் கருவிகளுடன் கதாப்பிரசங்கம் செய்து வந்தார்.

1956ம் ஆண்டளவில் மகாதேவா சுவாமிகளினதும், யோகர் சுவாமிகளினதும் சம்மதத்துடன் வன்னிப் பகுதி கிளிநொச்சி ஜெயந்தி நகரில் மகாதேவா ஆச்சிரமம் நிறுவினார். ஆச்சிரமம் வன்னிவாழ் மக்களுக்குச் சமயப் புரட்சியை உண்டாக்கியது.

## ஞானபரம்பரைக்கு அடியெடுத்து வைத்த மகாதேவா ஆச்சிரமம்

10ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகங்களில் ஊர்காவற்றுறைமுகம் சைவசமயத்தில் மேம்பட்டுக் காணப்பட்டது. 15ம் நூற்றாண்டின் பின் அந்நியரின் வருகையால் இலங்கைக் கரையோரங்களில் மதமாற்றம் நிகழ்ந்தன.

05-09-1874ல் மகாதேவா கரம்பனில் இராமநாதரின் குடும்பத்தில் தோன்றினார். அக்குடும்பம் சைவசமயப் பற்றுள்ள மையால், சுவாமிகளும் இளமையிலே இந்திய ஆச்சிரமங்களில் கல்வி கற்றமையால் கந்தர் மடத்தில் வேதாந்த மடம் தாபிதம் செய்தார். சுவாமிகளின் உள்நோக்கம் இந்தியாவிலுள்ள ஞானபரம்பரை போன்று ஈழத்தில் இருக்க வேண்டும் என்பதாகும்.

நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் வீணாகுவதில்லை. மகாதேவா சுவாமிகளின் நல்லெண்ணப்படி வடிவேற் சுவாமிகள் கிளிநொச்சியில் யோகர் சுவாமிகளின் சிறுத் தொண்டனாக இருந்து மகாதேவா ஆச்சிரமத்தின் மூலம் வன்னிவாழ் சைவமக்களுக்கு எண்ணிக்கையற்ற சமயப் பணிகள் செய்தார்.

அக்காலத்தில் வன்னிவாழ் வறுமைப்பட்ட மக்கள் கல்வி வசதியின்றிக் காணப்பட்டனர். அதனால் அயலில் அமரத்துவம் அடைந்த கதிரவேல் ஐயா அவர்களைக் கொண்டு குருகுலம் தாபிதம் செய்தார். சைவப்பிள்ளைகள் கல்வி கற்க, கிளிநொச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்க உதவியுடன் ஜெயந்திநகர் முதலாகப் பல பாடசாலைகள் ஆலயங்கள் நிறுவினார். தமது காலத்திலேயே ஆச்சிரமப் பொறுப்பை இன்றுள்ள தவத்திரு கணேசானந்தா சுவாமிகளிடம் கையளித்தார். 1990 அளவில் ஆனி ஆயிலிய நட்சத்திரத்தன்று மகாசமாதியடைந்தார்.

## மகாதேவா சைவச் சிறுவர் இல்லம்

1996ன் இனமதக் கலவரத்தால் கணேசானந்த சுவாமிகள் உடுத்த ஒரு வேட்டியுடன் அகதியாக இடம்பெயர்ந்து முழங்காவிலிலும் ஸ்கந்தபுரத்திலும் ஆச்சிரமம் அமைத்து சைவப்பணிகள் பல புரிந்தார். சுவாமிகளின் சைவப்பணி விரிவடைய அக்கால அகதிப்பிள்ளைகளின் ஏழ்மை நிலைமை சுவாமிகளின் மனதைப் புண்படுத்தியது.

இதனால் 1997ம் ஆண்டில் அகதி மாணவர்களுக்குச் சிறிய அளவில் இல்லம் அமைத்தார். ஓரளவு வன்னிப் பிரதேசம் சமாதான நிலை அடைந்தது. அதனால் மகாதேவா ஆச்சிரமத்திற்குரிய 25 ஏக்கர் காட்டு நிலத்தை வளப்படுத்தினார். அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உதவியுடன் சில கட்டிடங்கள் நிறுவினார்.

இப்போது 50 மாணவர்களுடன் சைவச்சிறுவர் இல்லம் நடத்தப்பட்டு வருகின்றது. எனினும் இவ்வில்லம் அமைந்த பகுதி காட்டுப்பகுதியாகிய புதுமுறிப்பாகும். மின்வெளிச்சம் இல்லை. போக்குவரத்து வசதியும் இல்லை. அத்துடன் மாணவர்கள் வசதியாக இருந்து படிக்க வாங்கு மேசைகளுமில்லை. இவ்வாறு பல பற்றாக்குறைகளுடனும், ஆளுதவிகள் இல்லாத நிலைமை களுடன் சைவச்சிறுவர் இல்லம் இயங்கி வருகின்றது. எனினும் இல்ல மாணவர்கள் அதிகாலையில் எழுந்து நியமக் கடன்களை முடித்து நீராடி அனுட்டான நீராடி சூரிய நமஸ்கார முதல் கூட்டுப்பிரார்த்தனை

செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## மகாதேவா சைவ மகளிர் இல்லம்

1964ம் ஆண்டு அனாதைப் பிள்ளைகள், ஆதரவற்ற வறிய குடும்பத்திலுள்ள பிள்ளைகள் அங்கவீனர், முதியோர் ஆதரிப்பதற்காகக் குருகுலம் அமைக்கப்பட்டது. குருகுலத்தின் உள்நோக்கம் சைவமும் தமிழும் தளராது புறச்சமயத்தின் பரவலை நீக்குதலாகும். 1964-87 வரை குருகுலம் பெரிய சாதனைகளை நிலைநாட்டும்போது இனமதப் பிரச்சினையால் குருகுல வளர்ச்சி குன்றியது. சைவப் பண்பாடுகளும் அருகி, அசைவ உணவை குருகுல மாணவர்கள் பாவிக்க வேண்டியதாயிற்று.

இதனால் கிளிநொச்சி வாழ்மக்கள் அதிருப்தி அடைந்தனர். நல்ல ஆன்மீக வளர்ச்சி நாட்டைக் கட்டி எழுப்பும் என்பது சுவாமி விவேகானந்தரின் வீரமுழக்கம்.

புறச்சமயம் வளர புறச்சமய மதகுருமார்கள் அநாதை இல்லம் பாடசாலை முதலியன வளர்ப்பது கண்கூடு. அவர்களே தம் தேவாலயங்களை நிர்வகிப்பது பலரும் அறிவர். ஆனால் எமது சைவசமயத்தில் ஈழத்தில் இக்கோட்பாடுகளில்லை.

துறவிகள், சந்நியாசிகள் எவருக்கும் ஈழத்தில் தனி இயக்கம் கிடையாது. புத்த குருமாருக்கும் கிறிஸ்தவருக்கும் தனி இயக்கம் இருப்பது கண்கூடு.

எனவே இக்குறைபாடுகள் நீங்க சைவ மதகுருமார் அனாதை இல்லங்களைச் சிறப்பாகப் பெண் இல்லங்களை மத குருமார் (சந்நியாசினிகள்) நிர்வகிக்க வேண்டும். அப்போது தான் நாட்டில் ஆன்மீக வளர்ச்சி, ஒளி, ஒலி பிறக்கும். சைவப் பண்பாடு கலாசாரம் வளர்வதால் சைவமும் தமிழும் அச்சமின்றி இயங்க முடியும் என்பது அடியேனின் நம்பிக்கை.

அதனால் வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருக்கும் சைவப்பெருமக்கள் மகாதேவா சைவமகளிர் இல்லம் கால் கோளுக்கு கைகொடுத்து உதவுமாறு அன்புடன் மகாதேவா ஆச்சிரம தவத்திரு கணேசானந்த சுவாமிகள் கோருகின்றார்.

விலாசம்:

தவத்திரு கணேசானந்த சுவாமிகள்
மகாதேவா ஆச்சிரமம்
கிளிநொச்சி
இலங்கை

# முக்குணங்களிலிருந்தும் விடுதலை - கீதை

C.S. இராஜரத்தினம்

அர்ச்சுனன் கேட்கிறான்:

கிருஷ்ணா! சாத்திரங்களில் கூறப்பட்ட விதிமுறையைக் கைவிட்டு பக்தியுடன் பகவானுக்குப் பூஜை செய்தால் அவர்களின் நிலை தூய சத்துவமா? 'ரஜோ' என்ற ஆசையா? அல்லது தமோ என்ற மயக்கமா?

கிருஷ்ணர் கூறுகிறார்:

அர்ச்சுனா! அனைத்து உயிர்களும் சாத்வீகம், ராஜசம், தாமதம் என்கிற மூன்று குணங்களையும் கொண்டன. இம்மூன்று குணங்களும் இல்லாத உயிரினமே உலகில் இல்லை. இதனை விளக்குகிறேன் கேள்.

பாரதகுமாரா!

ஒவ்வொருவர்க்கும் அவரது இயல்பினை ஒட்டியே நம்பிக்கை உண்டு. மனிதன் நம்பிக்கையிலேயே நிலைத்தவன். சாத்வீகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள். அதுபோல் ராஜத தாமத குணமுடையோரும் ஆசையிலும், மயக்கத் திலும் நம்பிக்கை கொண்டே வாழ்கிறார்கள்.

தூய்மையில் நம்பிக்கை வைத்தவர்கள் உண்மை எனும் மூலத்தையும், ஆசையில் நம்பிக்கை வைத்தோர் குட்டி தேவதை களையும், அரக்கர்களையும் வழிபடுகின்றார்கள். மயக்க குணமுள்ளவர் பூதங்களையும் பேய்களையும் வணங்குவர்.

குந்தி மைந்தா!

சாத்வீக குணமுடையோர் களங்கமற்ற தன்மையினால் தீமையற்று விளங்குகிறார்கள். பேரின்பத்திலும் ஞானத்திலும் நாட்டம் உண்டாக்கி, தூய உடலோடு குருவருளும், திருவருளும் கைவரப்பட்டு ஆத்மீக உணர்வோடு ஆன்மாவை பிணைத்து விடுகிறார்கள். இவர்கள் நேர்வழி நடத்தல், கொல்லாமை, புலால் மறுத்தல், இன்னா சொல்லாமை, நிகரில்லா ஞானம், அகிம்சை, தர்மம் முதலிய குணங்களைப் பின்பற்றுவர்.

ஆனால் அகந்தை கொண்டவன் ஆதிக்கக்காரன். பலனை விரும்பிப் பணிசெய்பவன். தன்னையும் என்னையும் வருத்திக் கஷ்டப்பட்டு கடமை செய்பவன். இவ்வகையினர் அரக்க குணம்

கொண்டவர்கள். ஆசை காரணமான பற்றும், பாசமும் வைத்துப் பார்க்கும் இடமெல்லாம் பலனையே பார்த்து மண், பெண், பொன் என மூவாசைகட்கும் அடிமைப்பட்டு வருமானத்தில் வரையிலா நாட்டம் கொள்கின்றனர். அசுத்த சுபாபம், தினமும் இன்பமும் துன்பமும் - ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பக் கடலில் மூழ்கி கவலையும் நோயும் தரவல்லதுமான 'ராஜதகுணம்' கொள்கின்றனர்.

தாமத குணமுடையோன் அஞ்ஞானக் கடலில் மூழ்கி, விஞ்ஞானத்தின் விபரம் மறந்து, மந்தம், கவனக்குறைவு என்பவற்றால் மயக்க குணமுடையோனாகிறான். மேலும் உறங்கி விடுகிறான், ஒவ்வொரு நாளும், பயந்து சாவான். பார்ப்பதில் எல்லாம், துக்கம் கொள்வான். தொடுவதில் எல்லாம், கஷ்டம் கொள்வான். காலம் முழுவதுமே, அதனை மாற்றும் அறிவைப் பெறமாட்டான். ஆணவம் எதுவும் அழியவும் மாட்டாது. ஏன் செய்கிறோம் எதற்குச் செய்கிறோம் என்பதை அறியான். பொருளைச் செலவிடும் போகம் விரும்பி, குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்தி, தான் அறியாக் கடமை புரிந்து, நீதி இல்லாததை நீதி என்றும், தலைகீழாக தன்னைப் பார்ப்பதும், தன்னையும் தான் பிறந்த மண்ணையும் நாசமாக்கி சம்சார வெள்ளத்தில் ஓடும் ஓடத்தை பள்ளத்தில் மூழ்கடித்து வாழ்வான். முரடன், திருடன் மோசக்காரன், சோம்பல் மிக்கவன் சுறுசுறுப்பற்றவன், காலம் தாழ்த்தி கருமம் செய்பவன், அழுகை மிக்கவன்.

இவர்கள் கல்லா மனிதராய் படிப்பறியாப் பாமரனாய், எழுத்தறியா பாவியாய் பிறந்தும் இறந்தும் பிறப்பிற்கே தொழிலாய் இறக்கிறார்கள்.

சாத்திர விதிப்படி நடந்து இது என்கடமை என்று எண்ணி கடமையைச் செய்து பலனைத் துறந்து மனதை ஒருநிலைப்படுத்தி மிகுந்த நம்பிக்கை கொண்டவனே சாத்வீகக் குணமுடையவன் (ராஜத குணம் பேராசையும் தாமாத குணம் மயக்க குணமும் என்றறிக) சாத்வீகன் இவ்வுடலின் முக்குணங்களையும் கடந்து, மூப்புப் பிணி, பிறப்பு, இறப்பு ஆகிய சம்சாரக் கடலைத் தாண்டி விடுதலை பெற்று அமரநிலை அடைவான்.

அர்ச்சுனன் கேட்கிறான்:

முக்குணங்களைக் கடந்தவனின் அறிகுறிகள் எவை? கண்ணா அவற்றை கடப்பது எப்படி? கடந்தவன் எவ்வாறு ஒழுகுவான்?'

பகவான் கிருஷ்ணன் கூறியது:

‘ நடுநிலை தவறாதவன். மதிப்பாரையும், மதியாரையும் ஒத்து நோக்குவதும் விருப்பு வெறுப்பு, வேண்டுதல், வேண்டாமை இல்லானாய் ஆசைக் கருமங்களைத் துறந்து தன்முனைப்பற்ற குணாதீசானகத் திகழ்வான். நெறி விலகா பக்தியோகத்தால் என்னை வழிபடுபவர் எவரோ அவரே இக்குணங்களைக் கடந்து சொற்பதம் கடந்த தூய மெஞ்ஞானியாய், பரமானந்தமாகிய பிரமமாகும் தகுதிபெறுகிறான்.

அழிவற்ற, மாற்றம் அடையாத எப்பவும் நிலையான பிரமத்திற்கும், நிலைத்த தர்மத்திற்கும், ஒப்புயர்வற்ற பேரின்பத்திற்கும் நானே இருப்பிடம். எனவே ஞானிகள் அறிவையும், மெய்யுணர்வையும் தரவல்ல அரிது அரிதான மானிடப் பிறவியைப் பெற்ற பின்பு குணத்தின் மீதான பற்றை விட்டு என்னை வணங்குகின்றார்கள்.

ஞானமும், தியானமும் கைவரப்பெற்றவன் எப்போதும் விழிப்புணர்வோடு இந்திரியங்களை வென்று என்னை வழிபட வேண்டும்.

அமைதியுற்ற அறிவோடு, பற்றின்மையை துணையாகக் கொண்டு சத்வகுணத்தை வெல்ல வேண்டும். இவன் குணங்களில் நின்று விடுபட்டு சூக்கும சரீரத்தை விடுத்து என்னை அடைகிறான்.

வனம் சாத்துவீகத்தின் உறைவிடம். கிராமம் இராஜதமானது. தாமதமானது சூதாட்டக் குகை போன்றது. எனது உறைவிடமோ குணங்கள் அற்றவை.

தன்னை என்னிடம் ஒப்படைப்பவன் இக்குணங்களைக் கடந்தவன். மகிழ்ச்சியால் நிரம்பிய இதயம், மட்டுப்படுத்திய ஆசை, அமைதியுள்ள உடல், சலியாத பற்றற்ற மனம் - அற்றது பற்றெனில் உற்றது வீடு என்பது சத்வகுணத்தின் அறிகுறிகள். என் இருப்பிடத்தை உணர்வதற்கு வாயில் இதுவே.

அடங்கா அவா, இச்சை நரை உடல், சலிக்கும் உள்ளம் - இவை ராஜத குணத்தின் விளைவுகள். ஊக்கமில்லா உருக்குலைந்த பேதலிக்கும் உள்ளம், அறியாமை, மந்தம் பெற்ற உள்ளம், வறுமை, சோர்வு, துயரம் பெற்ற உடல் தாமத குணத்தின் விளைவுகளாகும்.

சாத்வீகம் ஓங்க அறிவு ஒளிரும். ராஜதம் ஓங்க உணர்ச்சி பெருகும். தாமதம் ஓங்க அறியாமை எழும்பும்.

அகங்காரத்தினின்றும் முக்குணங்களின் பந்தத்தினின்றும் விடுபட்டவன் மனதின் மயக்கத்திலிருந்து விடுதலை பெற்று எங்கும் பரந்த தத்துவமாய் அங்கிங்கெனாதபடி பிரகாசமாய் நீக்கமற

விளங்கும் பிரம்மம் எனும் என்னிடம் பூரண வாழ்வெய்துகிறான்.

ஒண்பொருளாகிய பரம்பொருளுக்கு அல்லது ஈஸ்வரனுக்கு அல்லது பிரம்பத்துக்கு மூன்று பெயர்கள் உண்டு. அவை 'ஓம் தத் ஸத்' என்பவையே. இந்தப் பெயர்களைக் கொண்டே பிரமானங்களும் வேதங்களும், பூஜைகளும் என்னால் படைக்கப் பட்டன. 'ஓம்' என்று சொன்ன பிறகே தானம், பூஜை, தவம் செய்யத் தொடங்குவார்கள்.

பலன் விரும்பாது சொர்க்கத்தை விரும்பும் உத்தமர்கள் 'தத்' என்று சொன்ன பிறகே பூஜை, தானம், தவம் செய்கிறார்கள். 'ஸத்' என்ற வார்த்தையே மங்கலகரமான காரியங்களுக்கும் உபயோகப்படுகிறது.


APPLEMORE

AUTOMOTIVE INC.

வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

TEL: (416) 285-4998

435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B

SCARBOROUGH, ONT.

# ஊரார் மகன்

த. வடிவேலு
ஓய்வுபெற்ற கிராம அலுவலர், புங்குடுதீவு

உயர்ந்தோர் மாட்டு உலகம் என்பது முதுமொழி. இம்மொழிக்கு இயைய உலகில் வாழ்ந்தவர் பலர். வாழ்ந்து கொண்டிருப்பவர் சிலர். மனிதவாழ்வு சிறந்தது என்பதற்கு பகுத்தறிவே சிறந்ததெனக் கொள்வதை தற்காலத்தில் முற்றுமாய் ஏற்க இயலாத தன்மைய தாய்ப்படுகிது. தற்போது மக்கள் நீதிக்குத் தலை வணங்கு வதில்லை. நியாயம் தெரிவதில்லை. நற்கருமம் ஆற்றுவாரில்லை. நற்குணங்கள் இல்லாதவர்களாய் தெய்வசிந்தனை அற்றவர்களாய் ஆன்ம வாழ்வையே எண்ணாதவர்களாய் வாழ்வின் மகிமை விளங்காதவர் களாய் வாழ்வாங்கு வாழத்தெரியாது உழலுகின்ற தன்மை பரவலாகப்படுகிறது. இந்நிலையிற் கூட வல்லவர்கள் நல்லவர்கள் பெருகிய நிலையில்லையாயினும் அருகிய நிலையில் கண்ணிய வான்களாய் தெய்வசிந்தனை உள்ளவர்களாய் உயர்ந்த உள்ளத் தோடு வாழ்க்கையை வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பதனாலன்றோ உயர்ந்தோர் மாட்டு உலக மென நிரூபணமாகின்றது. உலகம் நிலவுகின்றது. உயர்ந்தோர் காலக்கணக்கின்றி காலங்காலமாய் வாழ்கிறார்கள்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியராய் வாழ்வியல் கொண்ட வர்கள் சமுதாய நலனுக்காக தங்கள் சுகபோகங்களைத் துறந்து பொது நோக்கோடு செயற்பட்டு மறைந்த எம்நாட்டுப் பெரியார் வரிசையில் சரவணமுத்துச்சுவாமியும் ஒருவர். இவர் சிறப்பிக்கப்பட வேண்டியவர். போற்றப்பட வேண்டியவர். காவியுடை போர்த்தாத சாமியார். கதர் உடை தரித்த சாமியார். மகாத்மாகாந்தி மேல் பக்தி கொண்ட சாமியார். நைஷ்டிகப் பிரமச்சாரியாரான சாமியார். மழித்தலும் நீட்டலுமில்லாச் சாமியார். புங்குடுதீவு மக்கள் பெருமைகொண்டு வாழ வழிசமைத்த சாமியார் சரவணமுத்துச் சாமியார். இவரது உடல் சரிந்தாலும், உயிர் பிரிந்தாலும், புகழுடம்பு நிலைக்கட்டும்! வளரட்டும்! வழங்கட்டும்!

கொடிது கொடிது வறுமை கொடிது அதனிலும் இளமையில் வறுமை கொடிது. இவர் இளமையில் வறுமை கண்டவர், வாழ்ந்து பட்டவர். வறுமையைப் பட்டுணர்ந்து தெளிந்ததனால் மாற்று மாத்திரை கண்டறிந்தவர். சொல்வதானால் வணிகத்தொழிலே வறுமை நீக்கும் உன்னத தொழிலெனத் தெளிந்தவர். தெளிந்த தெளிவினால்

இளவயதில் கொழும்பு நகர் பொறளையில் வியாபாரத் தாபனம் அமைத்தார். உழைப்பு மனிதனை உயர்த்தும். ஆகவே இவர் செய்யுந்தொழிலே தெய்வமாகக் கொண்டவர். ஊக்கம், விடாமுயற்சி, கடின உழைப்பு இவற்றால் தொழில் முன்னேறியது. வாழ்வு சிறந்தது. இவ்வாழ்வில் பொருள் உளதாயிற்று. அருளும் உளதாயிற்று. உண்மை பேசி பொய்ம்மை நீக்கி தொழிலின் செயலில் உண்டாகும் நன்மையையும் தின்மையையும் பின்னால் ஏற்படக்கூடிய இலாபத்தையும் எண்ணியாங்கு எண்ணிச் செயற்பட்டு வெற்றி கொண்டவர் என்பதற்கு நிதர்சன புருஷர் இவர்.

அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகு உவப்பச் செய்து - பெறுவதினால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

இது நாலடியார் வாசகம். இவர் இதற்கு இலக்கணமானவர். வணிகத்தில் பெருந் தன வந்தனாவதற்கு இவர் காட்டும் அன்பும் அடக்கமும் நல்லோர் நட்பும் காரணமென்பதை அறிவார் அறிவர்.

சுவாமி சிவானந்தர் ரமணமகரிஷி, காஞ்சிப்பெரியார் சங்கராச்சாரியார், ஈழத்து யோகர் சுவாமிகள், மகாத்மா காந்தியடிகள் ஆகிய மகான்களின் தரிசனமும் ஆசியும் கிடைக்கப் பேறுபெற்ற பெரியார். தமிழ்நாட்டின், ஈழத்தின் பல்துறைசார் மூதறிஞர்கள் பலரோடு பலகாலம் பழகிப் பரிச்சயமானவர். ஈழத்தில் கடந்த நூற்றாண்டில் நடந்த பல சமய கலாசார மாநாடுகளுக்கும், பேராளர் மகாநாடுகளுக்கும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்களை வரவழைத்து உபசரித்து தொண்டாற்றிய பெருந்தொண்டர்.

தாயகத்தின் திருக்கோயில் திருப்பணிகள், தர்ம மடங்கள், தொண்டர் நிலையங்கள், வித்தியாசாலைகள், வைத்தியசாலைகள், கிராம அபிவிருத்திக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், கலை கலாச்சாரமன்றங்கள் முதலான சமூக முன்னேற்றம் சார்ந்த நற்கருமங்களுக்கு இல்லையென்னாத மனித நேயத்தோடு அள்ளிக் கொடுக்கும் கொடையாளி. தீவின் கற்பகதரு.

இவர் ஆயிரம் பிறை கண்ட பெரியார். ஒரு நூற்றாண்டு வாழ்ந்து வழிகாட்டிய ஒழுக்கசீலர். எல்லோரோடும் சகஜமாய் அன்பாகவே பேசுவார். அன்புடனே பழகுவார். சிறியோராயினும் பெரியோராயினும் நேசிப்பார். நன்கு மதிப்பார். மனித நேயம் விஞ்சி நிற்கும் நற்குணசீலர். 'சிவம் சிவம்' என்ற மந்திரவாக்கியம்

என்றும்அவரது பேச்சில் ஒலிக்கும். திருவாசகம் அவர் மூச்சு. சிறுமை தெரியாதவர். பெருமை மிக்கவர் என்றும் பணியும் பெருமையாளர்.

பெருமை யுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை யுடைய செயல்.

இவரின் இவ்வரிய செயல் பிறந்த மண்ணில் எம்சமய குரவர்களுக்கான நால்வர் மடாலயமாகத் திகழ்கிறது. திருக்கேதீஸ் வரத்தில் திருவாசகமடமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. மகாசிவராத்திரி விழாவா? மகோற்சவ விழாவா? திருவாதிரை விழாவா? திருவாசக விழாவா? எல்லா விழாக்களுக்கும் அடியார் கூட்டம் பெருகும். திருவாசக மடத்தில் அன்னதானமும் வளரும். நாளும் பொழுதும் என்ற காலப்பொழுது உலவாது. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அங்கு முதன்மையானதாக விளங்கும். உலகின் பல கோடிகளிலிருந்து வரும் அடியார் கூட்டம் ஆற அமர்ந்து செல்ல அடையாநெடுங்கதவாய் இத் திருவாசக மடம் விளங்கு கின்றது. திருவாசக முற்றோதல் காலங்காலமாய் நடைபெற்று வருகின்றது. சைவம் காக்க, தமிழ் காக்க, தொண்டாற்ற வாய்ப் பானதாய், சிறப்பானதாய் அருள் வழிகாட்டுகின்றது இத்திருவாசக மடம். இவை செவ்வனே நடைபெறுவது சாமியாரின் தனித்துவத் தன்மையோ! என்ற திகைப்பும் அன்றி முன்னைப் பின்னைப்பயனோ? என்ற வியப்பும் காண்பார் எண்ணும் வகையில் நினைவுக்கு வரும். இறைவனின் அற்புதத் திருவிளையாடல் தானோ? என எண்ணத் தோன்றும். மணிவாசகப் பெருமானுக்காகச் சிவபெருமான் நரியைப் பரியாக்கியதும், பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டதுமான செயல் எவ்வாறோ அவ்வாறே திருவாசக மடமும் செயற்பட்டுவருகின்ற தென்ற அற்புதமான கருத்து வெளிப்படும். இவர் நன்றே செய்வார் அன்றே செய்வார்.

தன் உயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன்உயிரெல்லாம் தொழும்.

தனது உயிர் தனதல்ல என்னும் தன்மை அறிந்து உலகம் உய்ய ஏற்படுத்திய தொண்டு நிலையம் இத்திருவாசகமடமாகும். உலகம் உள்ளளவும் திருமடம் நிலையாய் நிற்க தொண்டு பெருக திருக்கேதீஸ்வரத்தான் திருவருள் பொலிவதாக! இவரின் வரம்பு மீறாத, தர்மம் குன்றாத சத்திய வாழ்வு எம்மனோர்க்கு முன்னோடியாய வழிகாட்டியாகத் திகழ்வதாக!

# Pada Yathra to Kathirgamam

Master Prakash Velummylum

"Haro Hare!" - the chants blaze as I reach the anxious crowd. Having heaved their belongings and a few weeks worth of food onto their heads, men, women, children and the elderly proceed on their path to Kathirgamam from their stop in Pottuvil. As the peace of the pada yathra (foot pilgrimage) group picked up to brisk march, I began to wonder how it was that I had embarked on this journey.

I had returned to Sri Lanka after 18 years, having left the island with my parents at the age of three. An unrelenting desire to see my homeland brought me back in May of 2002 during the early phases of the peace process. Having been born in Jaffna and having had many childhood ceremonies performed at Selva Sannithy, Lord Murugan's grace filled my life from a tender age. Selva Sannithy has a long history of being the home from which many devotees and swamis who would ascend on the annual march to Kathirgamam.

Sri Lanka, and specifically Jaffna, for centuries has been a land that follows Saivite teachings and Saiva Siddhanda philosophy. Worship at the main temples to this day follows Saiva Agama. However, at Kathirgamam and Selva Sannithy it is piety that takes precedence over rituals or tradition to bring about Lord Murugan's grace. It was piety that filled the air and the hearts of the many that walked to Kathirgamam. The journey proceeded through cities and villages towards the deep stretches of jungles and arid plains as though it were a pilgrimage through time that left civilization to reach the realm of Lord Murugan. Fuelled by their desire to fulfil their "calling" to reach the gates of Karthirgamam, pilgrims are tireless and dedicated.

My calling had come on Canada Day while I was at the Kallady Tiruchendur Murugan Temple. Earlier that morning, I had watched the sunrise over the east coast of Sri Lanka and felt this urge to

walk to Karthirgamam. This inclination flooded my thoughts like something I had never experienced before. It is understood by the many who frequent Karthirgamam on a pada yathra that a "calling" occurs and one can do little but obey its pull. Respecting my "calling", I arrived in Pottuvil just in time to catch the group heading towards the vast stretch of jungle connected to the Yala National Park.

Through this ten day walk to Kathirgamam, it became clear that the pilgrims had made sacrifices to submerse their ego and assume the role of a swami. Spiritual meditation, a vegetarian diet and piety were in the essence the mentality and lifestyle that one was expected to assume on the pada yathra. Although I have read about the path toward spirituality, nothing could have prepared me for this experience and as if is often said in Saiva teachings, spiritual awareness only happens through experience.

One of the most difficult and revealing ordeals for me was associating with the other swamis and devotes. I knew I was very much an outsider looking into their lives, but at the same time I couldn't help but feel that our lives for the next 10 days were weaved together. Regardless of where we came from or what our backgrounds were, our goals were intertwined. I had often wondered how the local Tamils from the North and East perceived me. Some had asked if this was somewhat of an amusement for me, not understanding that my reason for going to Kathirgamam was as genuine as that of anyone else.

Early in this journey I felt out of place and on the second day felt that I could not go on. However, it was then that a family from Thirukkovil that came on this journey had decided to help me and take me under their wing. They asked me to come with them if I felt lonely and asked me not to turn back from the pada yathra. I accepted their offer and joined them the rest of the way sharing in their lives and experiences. They were farmers from the Ampara district and as I began to understand their way of life, I began to understand the way of life of Tamils in Sri Lanka and for the very

first time I was starting to feel a sense of belonging within the community. I began to feel as if I was truly being immersed into the customs of the pada yathra and into the small community during this journey

One of the most remarkable stop was at Sanniyassi Malai - a rocky hill that protruded through the canopy upon which the vastness of the Sri Lankan jungle could be seen for miles. I saw that sunrise and sunset from this mystical place where renunciates were said to have meditated and lived. I had often read and learned that much of our suffering is associated with our attachments in this world. While meditating at Sanniyassi Malai, I came to experience what may have been a sense of renunciation. For these brief ten days I had left my life on hold and slowly I began to experience the inner release and peace that begins from meditation and one-pointed thought. If environment influences our experiences, there was certainly a feeling that the world was at peace from these ancient meditation grounds.

Even through the hardship, I felt that places such as Sanniyassi Malai were the simple delights that the Lord at Karthirgamam blessed his devotees with. Between Sanniyassi Malai and the coastal Ukandhai where Lord Murugan had lived with Sri Valli Devi, the night sky was graced with a myriad of stars shinning brightly into the dark night pointing as if to confirm that the heavens were near.

Although beauty was everywhere, the journey had also its share of perils. There were vast stretches of land through which water was not available. On some days, we had walked for over 20 miles under the scorching sun in the arid plains without clean water. Many, like myself, fell ill and some were lost in the jungle path. Herds of wild buffalo and elephants weaved through the path and predators were lurking closer than one would imagine. I once found myself trapped in a tree near the banks of the Kummukhan river waiting a hoard of wild boars to leave the vicinity. My thoughts as I sat there, inspired me to write the following piece.

- to be continued in the next issue

# சைவத் திருமுறை முற்றோதுதல் - ஓர் பார்வை

பேரறிஞர் முருகவே பரமநாதன்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே

- திருமந்திரம் 82

தமிழ்ச் செய்தல் - அன்பு செய்தல், வேதசாரங்களை வடமொழியில் இருந்து தமிழ் மொழிப் பொருளாக மாற்றம் செய்தல். அன்பின் வழியது உயிர். அன்பின் பிள்ளை அருள்.

ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல்
ஈனமிலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை.

- சிவஞான சித்தியார்

பக்தியின் முதிர்ச்சி ஞானம். மோனம் என்பது ஞான வரம்பு. ஞானம் உடையோர் ஞானிகள், இல்லாதோர் அஞ்ஞானிகள். அஞ்ஞான இருள் போக்கத் திருமுறைகள் நல்ல கைவிளக்கு. இவை சைவசமயிகட்குக் கலங் கரைவிளக்கு. கலம்-கப்பல், கரைதல்-அழைத்தல், விளக்கு-தீபம், விளக்கம்-Light House. எனவே வழி தெரியாது, திக்குத்திசை தெரியாது தடுமாறும் சைவசமயிகளைக் கரையேற்றும் ஞானத்தோணியே திருமுறைகள். திருமுறைகள் ஞானப்பிழிவு, வேதசாரம். நிறைமொழிமாந்தர் இறையருள் பெற்றுப் பாடியவை. இறையருள் சொல்லப்பாடிய அருள்வாக்குகள்; அருட்பிரசாதங்கள்; மகாமந்திரங்கள். மந்திரமும் தந்திரமும் மருந்துமாய் நிற்பவன் சிவனே. சைவம் சிவத்தோடு தொடர்புடையது. சிவசம்பந்தமான சமயம் சைவம். நாமெல்லாம் சைவ சமயக்காரர். இறைவனாம் சிவனுக்கே சைவன் என்ற பெயரும் உண்டு. (அடங்கன் முறை 4070.8062)

சிவம் செம்மை என்ற அடியில் இருந்து பிறந்தது. செம்மை-நன்மை, நேர்மை, சிறப்பு, மங்கலம்-சுகம் என்ற பண்புகளையும் செந்நிறத்தையும் குறிப்பதுதான் சிவம் என்ற பிரயோகம். சிவச் சமயமும், நம் தமிழும் பிறிவில்லாதவை. பிரிக்கவே முடியாதவை. இவ்விரண்டையும் எமது கண் என்றார் நாவலர் பிரான். கண்கெட்டபின் சூரியவணக்கம் செய்ய முடியாது. இவ்விரண்டையும் விட்டால் நாம்

குருடர்கள். 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற் கைகொட்டிச் சிரியாரோ' என்ற பாரதியின் திருவாக்கு பொன்னெழுத் துக்களே. அய்யன் திருவள்ளுவர் கடவுளைச் செம்பொருள் என்கிறார். (குறள் - 91, 358) சிவனை வணங்குவோர் சிவனடியார்கள், தொண்டர்கள். தொண்டர்தம் பெருமை சொல்லவும் படுமோ என்பது அவ்வை வாக்கு. தனியடியார், தொகையடியார் பற்றித் தொகுத்துப் பாடியவர் சுந்தரர், விரித்துப் பாடியவர் சேக்கிழார். அவரைத் தொண்டர் சீர் பரவுவார் என அநபாய சோழன் இரண்டாம் குலோத்துங்கன் சிறப்பித்தான்.

பெரிய புராணம் ஒரு தேசீய நூல். வரலாற்றுப் பதிவு. இத்திரு முறையிற் பெரும்பகுதி தோத்திரம். சிறுதொகுதி சாத்திரம். எல்லாமே கவிதை வடிவின. பக்தி இலக்கியம் செழித்த காலம் பல்லவர் காலம். பாட்டான நல்ல தொடையாய் போற்றி, பண்ணின் இசையையாய் நின்றாய் போற்றி, எண்ணும் எழுத்தும் சொல்லானாய் போற்றி. தமிழோடிசை பாடல் மறந்தறியேன் என அப்பர் பேசினார். இத் திருமுறைகள் மகாமந்திரங்களை அடிப்படையாக வைத்து வகுக்கப் பட்டன. இவை நமக்கு உயிராயும் உயிர்ப்பாயும் விளங்குவன என பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுகிறார். உயிர்ப்பு-மூச்சு. இறைவனைப் பூமாலையாற் பூசனை செய்யலாம். அவை வாடும். வாடாத பாமாலை தான் இப்பாசுரங்கள். நாயன்மார் அருளியவையே இப்பிரபந்தங்கள். பஞ்சபுராணம் திருமுறையில் இருந்தே படிக்க வேண்டும். புராணம் பெரியபுராணத்தில் இருந்து தெரிவு செய்து படிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு பழைய பாரம்பரியம். தாயுமானார் கூடப் பாட்டுத்திறத்தாலே இறைவனைப் போற்ற வேண்டும் என்கிறார்.

பன்மாலைத் திரள் இருக்கத் தமையுணர்ந்தோர்
    பாமாலைக்கேந்தான் பக்ஷம் என்று
நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்
    நலம் கறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்.

- தாயுமானார் பாடல் 16 பன்மாலை

நிறைஞானியான அவர் தன்னைக் கல்லாதவன் எனத் தற்சிறுமை (நைச்சியபாவம்) யாகப் பேசுகிறார். நாம் பிறவி நல்வினை தீவினையை ஏற்பவர்கள். இவற்றை இல்லாமற் செய்ய இறைவனது பெரும்புகழைப் பேச வேண்டுமென வள்ளுவனார் இடித்துரைக்

கின்றார்.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

- திருக்குறள் 5

புரிதல்-எப்பொழுதுஞ் சொல்லல். இறைமைக் குணங்கள் இவராயினாரை உடையர் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவுடைய இறைவன் புகழே பொருள் சேர் புகழ் எனப் பட்டது. பரிமேலழகர் தமிழ் வேதம் எனப்படும் தோத்திரங்களை மூவர் தமிழ் என்பர். அவர்களைப் போற் பாடுந்திறன் எனக்கில்லையேயென நெஞ்சம் புழுங்குகிறார் தாயுமானவர்.

பாகத்தி னால்கவிதை பாடிப்படிக்கவோ
பக்தி நெறி இல்லை வேத
பாராயணம் பனுவல் மூவர் செய்பனுவலது
பகரவோ இசையும் இல்லை.

- தாயுமானவர் பாடல்கள் 11-3

...........................கனிமதுரச்
சொல்லால் துதித்தும் நல்பச்சிலை
தூவியும், தொண்டர் இனம்
எல்லாம் பிழைத்தனர்.

- மேலது பாய்புலி 22

கன்னல் அமுது எனவும் முக்கனி எனவும் வாய்ஊறு
கண்டுஎனவும் அடியெடுத்துக்
கடவுளர்கள் தந்தது அல, .அழுது அழுது பேய்போல்
கருத்தில்எழு கின்ற எல்லாம்
என்னது அறியாமை அறிவு என்னும் இரு பகுதியால்
ஈட்டுதமிழ் என்தமிழனுக்கு
இன்னல் பகராது உலகம் ஆராமைமேலிட்டு
இருத்தலால், இத்தமிழையே
சொன்னவன்யான்.........

- மேலது சித்தர்கணம் 8

மேன்மை கொள்சைவநீதியின் மேம்பாடு எல்லாம் திருமுறைகளின்

அடிநாதமாய்க் கண்ட அருளாளர்கள் போற்றுதமிழ் திருமுறைத் தமிழே. இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட இத்திருமுறை நம்மூல பண்பாரமாகும்.

திருவிசைப்பாவில் அமைந்த திருவிடைகழிப்பதிகமும், பதினோராந்திருமறையில் வரும் திருமுருகு ஆற்றுப்படையும், திருமந்திரத்திற் காணப்படும் சிலபாடல்களும் முருகனோடு தொடர்புடையன. பதினோராந் திருமுறையில் வரும் 3 பிரபந்தங்கள் விநாயகர்மேற் பாடப்பட்டவை. நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் திருவிரட்டை மணிமாலை, கபிலர் மூத்த நாயனார் இரட்டை மணிமாலை, அதிராவடிகள் மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை, சம்பந்தர் தேவாரத்தில் ஒரு பாடல், திருமந்திரத்தில் ஒரு பாடல் ஆகியன விநாயகரைப் பற்றி வருகின்றன. மற்ற எல்லாமே சிவனைப் பாடியவையாகும்.

ஒன்பதாம் திருமுறைவரை இசைப்பாடல்கள். பத்தாம் திருமுறை சாத்திரம். 11ஆம் திருமுறை திருமுகப் பாசுரம் உட்பட பன்னிருவராற் பாடப்பட்ட 40 பிரபந்தங்களின் தொகுப்பாய் அமைந்துள்ளது. பாடல் தொகை( தேவாரம் 8250, திருவாசகம் 456, கோவையார் 400, திருமந்திரம் 3108, திருவிசைப்பா 301, பல்லாண்டு 13, பெரியபுராணம் 4286) மொத்தம் 17014.

பன்னிரு திருமுறைகளில் நால்வர் பாடல்களின் அற்புதங்கள் மகத்தானவை. நம்மவர்கள் திருநீறு வேண்டிப்பூச வெட்கப்படுவர், பூசிய திருநீற்றை அழிப்பர். இது சமயப்பிடிப்பின்மையை வெளிப்படுத்துகிறது. நாம் சிவசிவ என்று விபூதி தரிக்க வேண்டும் என்ற சைவ உணர்வு துளிர்விடத் திருமுறை நீர்ப்பாய்ச்சுகிறது.

ஆலயங்கள், ஆதீனங்கள், சமயதாபனங்களில் திருமுறைகளை ஓதும் வழக்கம் குன்றி வரக்காணலாம். தாய்நாட்டில் நாயன்மார்களின் சந்நிதி உள்ள சினகரங்கள் இதை மேற்கொள்வதாயும் தெரிய வில்லை. ஆலயங்கள் வணிக நோக்கத்தில் நடைபெறாமல் சமுதாயப் பட்டறைகளாக அமைய வேண்டுமென்பதை மனதிற் கொண்டால் திருமுறைகட்கு முன்னிடம் இருக்கும்.

பஞ்சபுராணம் ஓதுதல் கேலிக்கு இடம் ஆகாமல் ஓதுவதே மேன்மை. இது பொதுமக்களில் இருந்து பூசகரிடம் கைமாறக்கூடாது. தாயகத்திலும் தூர தேசங்களிலும் ஒரு சமயச் சரிவைக் காணமுடிகிறது. இந்நிலை வராமல் சைவப் பெருங்குடியினர் பேண வேண்டும்.

சமய பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இந்துசமயப் பேரவை கடந்த நான்காண்டுகளாகத் திருமுறை

முற்றோதலைச் செய்து வருகிறது. பங்குபற்றுவோர் கௌரவிக்கப் படுகிறார்கள். 26-07-2003 அன்று நல்லூர் முருகன் ஆலயத்தில் சிவனடியார் பெருமை போற்றும் திருவிழா நடந்தது. சிறார்கட்குச் சமயப் பரீட்சை வைத்துப் பரிசில்களும் பாராட்டுப் பத்திரம் வழங்கலும் தொடர்கின்றது. இதற்கு அனுசரணையாக முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் இருந்து வருகிறார்.

## திருமுறைப்பாராயணத்தின் பலாபலன்கள் சில:

திருமுறைகளை மக்கள் மத்தியில் அறிமுகம்செய்தல். அதிலே ஆர்வமும் அக்கறையும் கொள்ளச் செய்தல். திருமுறை அலைவீச்சை மக்கள் உள்ளங்களிலும் மகாதேவன் இல்லங்களிலும் பரிமளிக்கச்செய்தல். நல்ல ஒழுக்கசீலங்களை விதைத்தல், அகப்புறச் சுத்தத்தை வழிநடத்தல், நல்லெண்ணங்களை உருவாக்கல், மனனஞ்செய்தல், செய்வித்தல், பாடுதல், பொருளுணர்ந்து, பிழையின்றி, இசையுடன் பாடப்பழகல், தொண்டர் பெருமை, விபூதி உருத்திராட்ச மதிப்பு, உடை ஆசார அநுட்டானம் என்பவற்றை மனங்கொளச்செய்தல். வீண்வார்த்தை பேசாமல் இறைதியானத்தை திருமுறை மூலம் உருவாக்குதல். பக்தியை வளர்த்தல்-சமய அனுஷ்டானங்களை அறிமுகம்செய்தல் - விரதம், தரிசனநெறி, விழாக்கால அடக்கம் தொண்டு பற்றிய விளக்கம்செய்தல். போலிப் பாடல்களை விட்டு திருமுறைகளை ஓதச்செய்தல். செப்பமான சமயவாழ்வின் கடைப்பிடிப்புக்கு வழிகாட்டல்.

சமயம் கோயிலுள் நுடங்காமல் சமுதாயச் சேவையின் வழிபரப்பப்பட்டாற்றான் மக்கள் சேவைதான் மகாதேவன் சேவை என்ற பக்குவம் வளரும். இந்நெறியிலே நம் பிள்ளைகளையும் வழிநடத்துவோமாக!

---

## இந்துசமயப் பேரவைச் செய்திகள்


மாணிக்கவாசகசுவாமிகள், சுந்தரமூர்த்திநாயனார் ஆகியோரின் குருபூசைகள் குறித்த குருபூசை நாட்களில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றன.

**சரவணைமுத்துச் சுவாமிகளின் நினைவுக் கூட்டம்**

புங்குடுதீவைச் சேர்ந்த சரவணைமுத்துச் சுவாமிகளின் நினைவுக் கூட்டம் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. பலர் இரங்கல் உரை நிகழ்த்தினார்கள்.

# துவராடை கட்டாத கதராடை அடிகள் சரவணமுத்துச் சுவாமிகள்

புலவர் ஈழத்துச் சிவானந்தன்



பிரமச்சரியத்திலிருந்து சந்நியாசத்துக்குள் சங்கமமானவர் ஸ்ரீமத் சரவணமுத்துச் சுவாமிகள். கிரகஸ்தம், வானப்பிரஸ்தம் என்ற படிமுறைகளை தவளைப் பாய்ச்சலாய் தாண்டியவர் இவர். இலக்கிய இலக்கணங்களில் தான் தவளைப்பாய்ச்சல் உண்டு. இதனைத் துறவு நிலையில் காட்டி வியக்கவைத்தவர் சுவாமிகள். துறவு என்றால் துவராடை (காவி) கட்டுவது, காட்டுக்குப் போவது, தனிமைப்படுவது என்ற கருத்து நிலவிய காலத்தில் ஐந்து பொறி புலன்களின் வேட்கையைத் துறப்பது, பஞ்சமா பாதகச் செயல் களைத் துறப்பது, இல்லறம் என்பதை விலக்கி இல்லகம் என்பதை இணைப்பது, உறவு களோடும் ஊரோடும் உறவாடி வாழ்க்கையை விளங்குவது - விளங்க வைப்பது என்றதோர் புதுமையான பரிமாணத்தை அருள்நெறித்துறையில் காண் பித்தவர் சரவணமுத்துச் சுவாமிகள்.

தொழில் அதிபர்களும் அருள் அதிபர்கள் ஆகலாம் என்பதற்கு முன் உதாரணர் ஆன இவர் ஆன்மீகப் பழுப்புக்காய் இரு பக்குவ வழிகளைத் தேர்ந்து கொண்டவர். கேட்பது நடப்பது என்னும் இருவழிகளில் கருத்தூன்றியவர்.

திருவாசகம் இவருடைய தமிழ்வேதம். தெருவாசகம் (யாத்திரை) இவருடைய சரியை நெறி (கர்ம யோகம்). கிரியை, யோகம், ஞானம் என்னும் இதர விரதங்களின் பயன்களுக்கான

அத்திவாரப் படியாகிய சரியையை சரியான முறையில் கடைப்பிடித்துக் கரையேறியவர் சுவாமிகள். இவர் தொண்டு அப்பரடிகளைத் தொட்டுத் தொடர்ந்தது. இவருடைய வழிபாடு மணிவாசகப் பெருமானை வணங்கி நடந்தது. கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் முக்கோண முறைகளால் முதிர்வடைந்தவர். இவர் தமது தொண்ணூற்று ஏழாவது வயதில் பரிபூரணமானார்.

திருஞானசம்பந்தர் சிவபெருமானுக்கும் நமக்கும் சம்பந்தம் ஏற்பவும் தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் சம்பந்தம் உண்டாகவும் திருத்தலங்கள் தோறும் நடந்து நடந்து திருமுறைகளைப் பாடியவர். இன்னிசையால் நாளும் தமிழ் பரப்பிய பெருமையும் உடையவர். திருநாவுக்கரசர் நாடு உய்ய வந்தவர். சுந்தரர் நட்பின் இயல் புகளை விளங்க வைத்தவர். இந்த மூவரின் இயல்புகளையும் தன்னகத்தே போற்றி வாழ்ந்து கொண்டு ஊனினை உருக்கி உள்ஒளி பரப்பும் திருவாசகத்தை தனது வாழ்க்கை நூலாக வரித்து வாழ்ந்தவர் சுவாமிகள்.

மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலே செல்வங்களைக் கொட்டி கோயில் கட்டியதைப் போன்று திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் தமது தேவாரங்களால் பாடிப்பரவிய மன்னார் திருக்கேதீச்சரத்திலே தனது செல்வங்களாலும் செல்வந்தர்களிடம் திரட்டிய செல்வங்களாலும் திருவாசக மடத்தைக் கட்டி தமிழின் அடையாளத்தையும் பக்தி உணர்வையும் மக்கள் மனங்களில் பதிய வைத்தவர்.

வருடந்தோறும் நடைபெறும் திருவாசக விழாவிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன முதல்வர் சீலத்திரு பரமாசாரிய சுவாமிகள், வாகீசகலாநிதி கி.வா. ஜகந்நாதன், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், பேராசிரியர் ராதாகிருஷ்ணன், பேராசிரியர் தெ.போ. மீனாட்சி சுந்தரனார், சிலம்புச்செல்வர், மா. பொ. சிவஞானம், தர்மபுரம் சுவாமிநாதன், உள்ளிட்ட பல அறிஞர்களை இந்தியாவிலிருந்து அழைத்து திருவாசகத்தேன் வழங்க வழிசெய்தவர். ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும் என்ற அடிப்படைக் கோட்பாட்டில் சரவணமுத்துச் சுவாமிகள் ஒரு புரிந்துணர்வுப் போக்கை அன்று கடைப்பிடித்தமை இன்று கருதத்தக்கது.

திருவாசகத்திலுள்ள யாத்திரைப் பத்து என்ற பகுதியில்

தோய்ந்த ஈடுபாடு கொண்ட சுவாமிகள் திருத்தல யாத்திரைகளிலும் நாட்டமுடையவராய் விளங்கினார். ஈழத்துக் கோயில்களை ஓடியோடிக் கும்பிட்டவர். இவருடைய இந்திய திருத்தல யாத்திரை என்பது பெரும் பயணப்பட்டியலுக்குரியது. அரிய பயண அனுபவங்களைக் கொண்டது. கைலாசம், ஹரித்துவார், ஹாயா, காசி முதலிய வடஇந்திய பயணங்களும் சீர்காழி, சிதம்பரம்,காஞ்சிபுரம், திருவாலங்காடு, ஆறுபடைவீடுகள் ஆகியவற்றோடு பாடல் பெற்ற தலங்கள் அனைத்துக்கும் சென்று வழிபட்ட தவசீலர்.

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்ற அமைப்பால் ஈழத்துத் திருவாசக உருக்கூட்டலுக்கு வழிசமைத்தவர். ஆண்டு தோறும் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்திலே சுவாமிகள் பத்து நாட்கள் தொடர்ந்து நடத்தும் திருவாசக விழா தமிழையும் வளர்த்தது; சைவத்தையும் வளர்த்தது; தேசிய விழுமியங்களையும் வளர்த்தது. இந்திய இலங்கை அறிஞர்களை ஒன்றுகூட்டி நடத்திய இந்த விழாக்களிலே கலந்து கொண்டு திருவாசக உரைநிகழ்த்திய அனுபவமும் திருவாசகத்தேன் பருகிய நினைவுச் சுவையும் என்னுள்ளே இன்றும் ஊறி ஊறி உணர்வுகளை செழுமைப்படுத்துகின்றன.

சுவாமிகள் திருப்பணிக்காக பொருட் செல்வர்களைத் திரட்டியது போன்று அருட்பணிக்காக அருள் செல்வர்களையும் திரட்டியவர். அவர்கள் இவர் பணிக்கு பக்கபலமாயும் தக்க பயனாயும் சிவகோஷ்டிகளாய் விளங்கினார்கள். இவர்களுள் என் தந்தையார் சித்தாந்தச் செம்மல் சி. கணபதிப்பிள்ளை, சிறிய தந்தையார் பேராசான் சி. இ. சதாசிவம்பிள்ளை, வித்துவான் சி. ஆறுமுகம், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் பொன் அ. கனகசபை, பண்டிதர் மு. ஆறுமுகம், சைவப்பெரியார் ச. கணபதிப்பிள்ளை, புராண வித்தகர் மு. தியாகராசா, தேனிசை வேந்தர் வயலின் வே. சிவஞானம், புலவர் சி. விசாலாட்சி முதலியவர்கள் என் நினைவில் நின்றபடி.

திருக்கேதீஸ்வரத்து கௌரிநாயகி பிள்ளைத்தமிழை இயற்றி திருவாசக மடத்திலே பேராசிரியர் தெ. பொ. மீ. தலைமையில் அரங்கேற்றிய என் சித்தப்பா பேராசான் சி. இ. சதாசிவம்பிள்ளை இயற்றிய 'கேதீச்சரநாதர் கிள்ளை விடுதூது' என்ற தூதுப் பிரபந்தத்தில் சரவணமுத்துச் சுவாமிகளிடம் கிளியை

தூதனுப்புகையில் திருவாசகத்திற்கு திருமடம் கண்டு திருநெறிய தெய்வத்தமிழ் வளர்க்கும் சரவணமுத்து சுவாமிகளிடம் சென்று அவர் நலம் கேட்டு வருக என்றும் பாடிய வரிகள் இன்றும் தூதுப்பிரபந்த புலமையாளர்கள் நெஞ்சில் அலைகளாய் வீசிக் கொண்டிருக்கின்றன.

திருவாசக விழாவிலே இடம்பெறும் சிவபூசை மகாநாடு திருக்கேதீச்சரத்தை திருக்கைலாசமாக்கி விடும். அதனைக் கண்டவர்கள் இன்றும் விண்டு கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சிவாச்சாரியார்கள் வந்து குழுமி கூடிச் செய்யும்சிவபூசை மகாநாடு பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அருள் கனிந்த காட்சியானது. சிவபூசை மகாநாட்டில் கலந்து கொள்ளும் சிவாச்சாரியார்களில் சிலர் திருவாசக உரையும் நிகழ்த்துவர். இவர்களுள் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிவஸ்ரீ ச. பூரணானந்தேஸ்வரக் குருக்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கனடாவில் 1994ம் ஆண்டு நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டில் சுவாமிகளோடு சேர்ந்து ரொறன்ரோ, மொன்றியல், ஒட்டாவா ஆகிய இடங்களில் நடந்த சைவசித்தாந்த உரையரங்குகளில் நானும் கலந்து கொண்டவன் என்பதையும், கனடாவில் நான் வெளியிட்ட ஆலயமணி வெளியீட்டு விழாவிலே சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்புப் பிரதிகளை அன்பர்களுக்கு வழங்கினார் என்பதையும் கனடாவில் என் மூத்த மகள் கல்யாணத்தில் சுவாமிகள் கலந்து நின்று அவளுக்கு ஆசி கூறினார் என்பதையும் அவருடைய பேத்தியை நான் திருமணம் செய்து கொண்டமையையும் என் புண்ணியப் பேறுகளாய்க் குறித்துக் கொள்கிறேன்.

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட திருவருளின் கருணையை புரிந்து கொள்கிறேன். 'துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ, துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ', என்ற அப்பரடிகளின் திருவாக்கை விளங்கிக் கொள்கிறேன்.

சரவணமுத்து அடிகளின் ஆன்மா ஆனந்தநடராசனின் திருவடிகளில் காரைக்காலம்மையோடு பேரானந்தப் பெருவாழ்வு வாழ திருவாசகத்திற்கு வாச்சியமான சிதம்பர நடராசனைச் சிந்தித்துப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## அஞ்சலிகள்

### செழுங்கவிஞர் வித்துவான் வேலவனார் மறைவு

இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த ஈழத்து அறிஞர் வித்துவான் க. ந. வேலன், B.O.L. அவர்கள் யூன் 07, 2003ல் இறைவனடி எய்திவிட்டார்கள். ஆசிரியராக, விரிவுரையாளராக, கவிஞராக, எழுத்தாளராகப் பல துறைகளிலும் தமது பேராற்றலை நிலைநாட்டிய பெருந்தகை இவர். அற்புதமான பேச்சாளர்; அஃகி அகன்ற அறிஞர்; சிவயோக சுவாமிகளின் சீடர். 'சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு' என்பது இவர் எழுதிய ஆய்வு நூல். இந்த நூலுக்கு எழுதிய அன்புரையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்து முன்னாட் பேராசிரியர் டாக்டர் ந. சேதுரகுநாதன் அவர்கள்,

'தெள்ளத் தெளிந்த செழுங்கவிஞர் வேலவனார்
உள்ள உவந்துவந்து ஒண்மைநல - வெள்ளம்
பெருக்கெடுத்து வாழ்த்தப் பெரிதும் வரைந்தார்
அருட்கடலாம் யோகர் சுவாமி - தெருட்கடலின்
மெய்யுணர் வெல்லாம் வியந்துலகம் பாராட்ட
உய்யுவகை யார்க்கும் உணர்வுநிலை - கைகூடச்
செய்தார்காண் யாரும் செயற்கரிய செய்கை'

என்று பாராட்டியுள்ளார்.

வித்துவான் அவர்களின் மறைவு சைவத் தமிழ் உலகுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரின் பிரிவால் வருந்தும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் 'ஆத்மஜோதி' யினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அவரது ஆன்மா அமைதியுறுவதாக!

## கலாசூரி காலமானார்

பிரபல நாதஸ்வர மேதை கலாசூரி அளவையூர் என். கந்தசாமிப் பிள்ளை பத்மநாதன் அவர்கள் 14-07-2003ல் கொழும்பில் இறைபதம் அடைந்து விட்டார் என்ற செய்தி இசையுலகை அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறது.

அளவையூர் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வித்துவானாக இருந்த கலாசூரி அவர்கள் நல்லூர்க் கந்தன் ஆலய



உற்சவங்களிலும் தமது இசைத்திறனால் முருகப் பெருமானை மகிழ்வித்த பெருந்தொண்டர்.

03-08-2003 ஞாயிற்றுக்கிழமை கலாசூரி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகக் கனடா வாழ் இசைக்கலைஞர்களும் இரசிகப் பெருமக்களும் இணைந்து கனடா கந்தசுவாமி கோயிலில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்தினர். கூட்டத்துக்கு இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம் தலைமை வகித்தார்.

இசையுலகின் சூரியன் மறைந்துவிட்டாலும் அவரது புகழ் மறையாது. அவரது இசைப் பதிவுகள் அவரை என்றென்றும் வாழவைத்துக் கொண்டேயிருக்கும்.

அவரது ஆன்ம சாந்திக்காக 'ஆத்மஜோதி' வாசகர்கள் பிரார்த்திப்பார்களாக!

## கலாநிதி ச. முத்துலிங்கம் மறைவு



பேராதனை பல்கலைக்கழகத்திலும் கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முன்பு கல்வித்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய கலாநிதி ச. முத்துலிங்கம் அவர்கள் ஸ்காபரோவில் 23-08-2003ல் தமது எழுபத்தாறாவது வயதிற் காலமாகி விட்டார்கள்.

இவரிடம் கல்வித் தராதரப் பத்திர வகுப்பிற்கற்ற பட்டதாரி மாணவர்கள் உளவியல் கல்விப் புள்ளி விவரவியல் ஆகிய பாடங்களை வெகு சிறப்பாகவே கற்பிக்கும் இவரது திறமை யையும் மாணவரது வினாக்களுக்கு விடையளித்து விளக்கும் விவேகத்தையும் என்றென்றும் மறக்கமாட்டார்கள்.

தரப்படுத்தல் பல்கலைக்கழகம் வரை வந்தபோதுஅதனை முழுமூச்சாக எதிர்த்தவர் இவர்.

கலாநிதி அவர்கள் இயல்பாகவே இசை ஞானம் படைததவர். திருமுறைகளைப் பண்ணிசையோடு அழகாகப் பாடுவார்.

கனடாவில் பண்ணிசையை வளர்த்த பெருமையும் இவருக்கு உண்டு. அவரது ஆன்மா சாந்தியடைவதாக!

## திருவருட்செல்வர் விழா - 2003

கனடா சைவசித்தாந்த மன்றமும் சைவசமய குரவர் பாடசாலையும் இணைந்து வழங்கிய திருவருட்செல்வர் விழா ஆகஸ்ட் 08, 2003 வெள்ளிக்கிழமை மிசிசாகாவில் உள்ள யாழ். கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்குக் கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் திரு. தி. விசுவலிங்கம் தலைமை தாங்கினார். 'தமிழர் தகவல்' பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். 'அன்பு நெறி' திருவருட் செல்வர் சிறப்புமலரைக் கவிஞர் வி. கந்தவனம் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். திரு. சுப்பிரமணியம் கந்தசுவாமி அவர்கள் எழுதிய 'தென்னகத் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலை அறிமுகஞ் செய்து சட்டத்தரணி சிவ சிறீதரன் உரை நிகழ்த்தினார். இவற்றுக்கிடையே மாணவர் நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றன.

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகோற்சவம்

எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக் கொடியேற்றம் நிகழும் சுபானு ஆண்டு ஆவணித் திங்கள் 11ஆம் நாள் (28-08-2003) வியாழக்கிழமை நடைபெறத் திருவருள் வாய்க்கப் பெற்றது. வேட்டைத் திருவிழா ஆவணி 19ஆம் நாளும் சப்பறத் திருவிழா 20ஆம் நாளும் தேர் தீர்த்தத் திருவிழாக்கள் 21ஆம், 22ஆம் நாட்களிலும் நடைபெற அம்பாள் அருள்பாலித்துள்ளாள்.

---

## நன்றிகள்

சேக்கிழார் விழா பன்னிரு திருமுறை பூர்த்தி விழா ஆகியன நடத்துவதற்கு கணிசமான அளவு நிதி உதவி புரிந்த சைவப்பெரியார் வே. இ. இராசையா அவர்களுக்கும், தங்களால் இயன்ற உதவிகள் புரிந்த பேரவையின் சிவனடியார்களுக்கும் விளம்பரங்களை பிரசுரித்து உதவிய பத்திரிகைகளுக்கும் நூல் வெளியீடுகளில் முதற்பிரதியை வாங்கி சிறப்பித்த செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களுக்கும் சிறப்புப் பிரதிகள வாங்கியோருக்கும் இந்துசமயப் பேரவை நன்றி தெரிவிக்கின்றது.

# 9ஆவது உலகச் சைவ மாநாடு

உலகச் சைவப் பேரவையின் 9ஆவது மாநாடு இவ்வாண்டு செப்டம்பர் 26, 27, 28ஆம் திகதிகளில் மலேசியாவில் நடைபெறவுள்ளது. மாநாட்டை மலேசிய சைவசித்தாந்த மன்றம் பொறுப்பேற்று நடத்துகின்றது. மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவராக திரு. நா. திருவாசகம் அவர்கள் தொண்டாற்றுகின்றார்.

கனடாவிலிருந்து உலகச் சைவப் பேரவையின் கனடாக் கிளைத் தலைவர் டாக்டர் அ. சண்முகவடிவேல், இந்து சமயப் பேரவைக் காப்பாளரும் 'ஆத்மஜோதி' இதழின் பிரதம ஆசிரியருமாகிய கவிஞர் கலாநிதி வி. கந்தவனம், சிவதொண்டன் நிலையக் காப்பாளர் திரு. தி. சிவயோகபதி, திரு. க. வே. கணேஸ்வரன் தம்பதிகள் (இராமகிருஷ்ண நிலையம், கனடா), திரு. S. M. சிவனேசன், திரு. கேதா (N. K. S. யன்னல் அலங்கார நிலையம்) ஆகியவர்களுடன் பிரகாஷ் வேலும்மயிலும் என்கின்ற வாட்டலு பல்கலைக்கழக மாணவனும் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்கின்றனர்.

மாநாடு சிறப்புற நடைபெற 'ஆத்மஜோதி' எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி வாழ்த்துகின்றது.

## 9ஆவது உலக சைவ மாநாடு மலேசியா – 2003

**மாநாட்டின் கருப்பொருள்:**

**'எதிர்காலத் தலைமுறைக்குச் சைவம்'**

காலம்: செபடம்பர் 26, 27, 28, 2003

இடம்: திறப்பு விழா - சிலாங்கூர் சீனர் சமூக மண்டபம்
No.1 Jalan Maharajalela,
50150 Kuala Lumpur

மாநாட்டு மண்டபம்: ஆசிய பசிபிக் மேம்பாட்டு மையம்
Pesiaran Duta, 50770 Kuala Lumpur

ஏற்பாடு: மலேசிய சைவ சித்தாந்த மன்றம்

**தொடர்புகளுக்கு:**

**ஏற்பாட்டுக்குழுத் தலைவர்: திரு. நா. திருவாசகம்**
8-C Jalan Paoh, Off Jalan Loke Yew,
50460 Kuala Lumpur, Malaysia.
Tel: 603-92216460
e-mail: thiruvasagamn@hotmail.com

# தனக்குவமை இல்லாதான்

ஆசிரியை திருமதி தங்கமுத்து தம்பித்துரை

தனக்குவமை இல்லாதான், தானேயானான், இணையில்லாதவன், அழிவில்லாதவன், விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதன் - அவன்தான் இறைவன், கடவுள். கடவுள் என்றால் கடவுதல் அதாவது அசைதல் என்று பொருள்படும். அவன் அசைவிலேதான் உலகம் அசைகிறது. இன்னும் மனம் வாக்கு யாவற்றையுங் கடந்து கட என்ற சொல்லையும், எல்லாவற்றிலுங் கலந்து நிற்றலின் உள் என்ற சொல்லையுஞ் சேர்த்துக் கடவுள் என்று சூட்டினர்.

எல்லாவற்றையுங் கடந்து அவற்றின் உள்ளுமாகி நிற்பது பரம்பொருள். கடந்து நிற்கும் பொருளை அறிய முடியாது. அறிதல் என்றால் அறிவுக்குட்பட்டதாகும். கடந்து நிற்பதென்றால் அறிய முற்படும் அறிவையுங் கடந்து நிற்பது. அறிய முடியாத இறைவனைத் தான் அறிந்த மணிவாசகர் ''கனவேயும் தேவர்கள் காணபரிய கழலோன்' என்றும், "மூவரும் அறிகிலர் யாவாமற்றறிவார்" என்றுங் கூறுகின்றார்.

உள்குவார் உள்ளத்தில் உறைபவன் இறைவன். அவனைத் "தனக்குவமை இல்லாதான்" என்கிறார் தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை. "ஒருவனே ஒப்பில் அப்பனே" என்கிறார் மணிவாசகர். அவன் விண்ணாகி மண்ணாகி, நீராகி, நெருப்பாகி, காற்றாகி நின்று உயிர்கள் அனைத்தையுங் காத்து நிற்பவன். அதனாலேதான் ''பூதங்கள் தோறும் நின்றாயெனின் அல்லால் போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை" என்கிறார் மணிவாசகர்.

நினைந்துருகும் அடியாரின் துயர் துடைக்க ஓடோடி வருவான் பரமன். தாயை இழந்து தவித்த பன்றிக் குட்டிகளுக்கு தாயாய் வந்தார். தன்மீது ஆரா அன்பு கூர்ந்த அம்மையின் மகளின் பிரசவ காலத்தில் தாயாய் வந்து துணை புரிந்து தாயுமானார். சொந்தமின்றி வருந்தி நின்ற வந்திக்கு கூலியாளராய் வந்து மன்னனால் பிரம்படி பட்டார். இதையே ''கலிமதுரை மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன் மேனி'' என்கிறார் மணிவாசகர். கயிலையிலே சுந்தரருக்குச் சொன்ன சொல்லைக் காப்பாற்ற மண்ணுலகில் வந்து தடுத்தாட்கொண்டபோது 'பித்தா!' என்று ஏச்சு வாங்கினார். சொல்லால் அடிப்பினும் கல்லால் அடிப்பினும் கருணைக் கடலாகிய அவர் தன்னடியார்களுக்கு அருள்மழை பொழிவார்.

சுகத்தைச் செய்பவன் சங்கரன். அவன் பிறவிப் பிணி தீர்க்கும்

பிஞ்ஞகன். வினை வழி வீழ்ந்து பிறவிகள் எடுத்து இழைத்து நிற்கும் ஆன்மா அந்தப் பிறப்பெனும் பிணியை அறுக்கும் அருமருந்தன்ன ஆண்டவன் அடியினை அடைவதற்கு நெறிப்டுத்து வதே சைவநெறி. இதையே மணிவாசகர் திருவாசகத்திலே "பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" என்றும் "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்'' என்றும் கூறுகின்றார். இறைவனின் திருவடியாகிய படகை உதவியாகப் பற்றுகிறவர்களே பிறவிக் கடலை எளிதில் கடப்பர். அதாவது, பற்றுக் கொண்டு உலக இயல்புகளில் பற்றி நிற்கும் மனிதர்களால் பிறவிக் கடலை நீந்த முடியாது என்ற பொருள் துலங்க வள்ளுவர் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்று கூறுகின்றார்.

"ஊரும் சதம் அல்ல உற்றார் சதம் அல்ல உற்றுப் பெற்ற பேரும் சதம் அல்ல" என்கிறார் பட்டினத்தார். மண்ணிற் பிறந்து மாய வலையில் சிக்குண்டு பொன் பொருள் என்று தேடி வைத்த செல்வம் அனைத்தும் நிலையற்றவை. பக்தர்களின் உள்ளத்தா மரையில் வீற்றிருந்து உலகை ஆளும் உயர் பொருளாம் இறைவனின் திருவடித் தாமரைகளை தொழுகின்றவர்கள் அழியாச் செல்வமாகிய அருட் செல்வத்தை, திருவடித்தாமரைகளை அடைவர் என்பதை "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார். நிலமிசை நீடு வாழ்வார்" என்கிறார் வள்ளுவர்.

செய்தவினையில் வீழ்ந்து வருந்தி நிற்கும் உயிர்களை உய்விக்கும் உத்தமப் பொருள் பரம்பொருளே. அவன் கருணைப் பெருக்கை நாடினோரை வல்வினை வாதிக்க வல்லதல்ல என்பதை "காகமானது கோடி கூடிநின்றாலும் ஒரு கல்லின் முன் எதிர்நிற்குமோ? கர்மமானது கோடி முன்னே செய்தாலும் நின் கருணைப் பிரவாக அருளைத் தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ" என்கிறார் தாயுமானவர்.

அவரவர் உள்ளத்தில் உள்ளும் பொருளாகி வணங்குந் தெய்வமாகி அடியார்க்கு அருள் பாலிக்கும் அம்பலவாணன் ஒருநாமும் அற்றவன். உருவமற்றவன்; உள்ளதும் ஆனவன் இல்லதும் ஆனவன். அவனை "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமஞ் சொல்லித் தெள்ளோணங் கொட்டாமோ" என்கிறார் மணிவாசகர். உள்ளத்திற் கொள்ளுந் தெய்வமாய் தானே வந்து அருள் புரிவார். "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே'' மாதொரு பாகனார் வருவார். வேதங்கள் ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன். பிறந்த பறிப்பறக்கும் எங்கள் பெருமான் தனக்குவமை இல்லாதவன். அவன் அடி வணங்கி உய்வோமாக!

# ஹரன் சுவாமிகளுக்கு மணிவிழா

*(ராசெஸ்டர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சைதன்யானந்தநாத சரஸ்வதி சுவாமிகளின் (ஹரன் சுவாமிகளின்) மணிவிழா ஆவணி மாதம் 15ஆம் நாள் (31-08-2003) ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி கோயிலில் திரு. சாமி அப்பாத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மணிவிழாத் தம்பதிகளைக் கௌரவிக்குமுகமாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது.)*

## ஸ்ரீலஸ்ரீ சைதன்யானந்தா

திரு. சின்னய்யாபிள்ளை நவரத்தினம், கமலம்மாள் தம்பதியரின் ஒன்பது குழந்தைகளுள் கடைசியாகப் பிறந்தவர் விஜயஹரன். அவரது தந்தையின் குடும்பத்தில் ஆறுதலைமுறைகளாகத் தேவி வழிபாடு தொடர்ந்து வந்தது. 1918ம் ஆண்டு இவரது தந்தையின் ஒரே சகோதரியின் மறைவு ஏற்படுத்திய அதிர்ச்சி காரணமாக ஏறக்குறைய கைவிடப்பட்ட இந்த வழிபாட்டினைப் பற்றி தனது பத்தாவது வயதில் தன் தந்தையின் வாயிலாகத் தெரிந்து கொண்டார். தான் உரிய வயதிற்கு வந்த பிறகு இக்குடும்ப வழிபாட்டினை அவசியம் புத்துயிர் பெறச் செய்ய வேண்டுமென்று அச்சிறு வயதிலேயே உறுதிகொண்டார். இந்த உன்னதமான ஆசை வித்தாக இருந்தபோதே அதற்கான வழிவகைகளைத் தேவியே தோற்றுவிக்கலானாள்.

திரு. ஆனந்த குமாரசுவாமி, கரோல் விஸ்வநாத பிள்ளை, ஜஸ்டிஸ் ஸ்ரீஸ்கந்தராஜா போன்ற மேதைகளைப் படைத்த புகழ்பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வியை முடித்தபின், காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ சிவசச்சிதானந்த அம்மையாரால் முறைப்படி ஷடாக்ஷர மந்திர தீக்ஷை அளிக்கப்பட்டார். இப்பரமஹம்ச சந்நியாசினி புகழ்பெற்ற தவத்திரு சிவானந்த சரஸ்வதியின் மூத்த சீடர்களில் ஒருவர். அம்மையாரிடம் அவர்களின் பிரதம சிஷ்யையான ஸ்ரீமதி செல்வநாயகி கல்யாணசுந்தரம் அவர்களிடமும் பூசை செய்வதற்கான சில விதிமுறைகளை, திருகோணேச்வரத் தலத்தில் உப்புவெளி சிவானந்த தபோவனத்தில் கற்றுணர்ந்தார்.

1971ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் கட்டிடக் கலைப்பட்டம் பெற்றபின் ஆபிரிக்காவின் சாம்பியா தேசத்தில் லுஸாகா நகரத்தில் அரசாங்க கடடிடக்கலை நிபுணராகப் பணிபுரிந்தார். அங்குள்ளவர்களுக்காக பூசை செய்து வைக்கும் பணியை மேற்கொண்டு, பூசா உபசாரங்களில் ஒன்றாக 1976 முதல் லலிதா

சஹஸ்ரநாம பாராயணத்தை ஆரம்பித்தார். அங்குதான் அவர் தனது தற்போதைய குரு ஸ்ரீலஸ்ரீ அம்ருதானந்த நாத சரஸ்வதியை (டாக்டர் என்.பி.சாஸ்திரி) சந்தித்தார்.

லலிதா சஹஸ்ரநாம பாராயணத்தின்போது ஸ்ரீ அம்ருதானந்தா தசமுத்திரைகளைப் போடுவதைக் கண்டு ஒருநாள் திரு. ஹரன் தனக்கும் ஸ்ரீ வித்யா தீக்ஷை கொடுத்தருளுமாறு கேட்டுக்கொண்டார். ஒப்புக் கொண்டதோடல்லாமல் ஸ்ரீ அம்ருதானந்தா திரு. ஹரனுடைய வீட்டில் இருந்த பீடத்திற்கு வந்து 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் திகதி பௌர்ணமி யன்று மஹாஷோடசீ ந்யாஸத்துடன் நவாவரண பூசை செய்து, பாலா, ஸுதா, சௌபாக்யபஞ்சதசீ, மஹாஷோடசீ முதலான பதினாறு மந்திரங்களையும் திரு. ஹரனுக்கும் அவர் வாழ்க்கைத் துணைவி சகுந்தலா தேவிக்கும் உபதேசித்தார். எட்டுமணி நேரங்கள் நீடித்தது இச்சடங்கு. பின்பு நவாவரண பூசை முறைகளையும், தத்தாத்ரேய சம்பிரதாயப்படி அப்பூசையின் நுணுக்க விளக்கங்களையும் விவரமாகக் கற்றுத் தந்தார்.


1980ம் ஆண்டு முதல் திரு. ஹரன் ஐக்கிய அமெரிக்கா தேசத்திற்குக் குடிபெயர்ந்தார். அங்கு சென்ற பிறகு காஞ்சிபீடம் என்று முதலிலும் பின்பு ராஜராஜேஸ்வரி பீடமென்றும் பெயர் கொண்ட பீடத்தைத் தன் வீட்டிலேயே தாபித்து, நவாவரண பூசையைத் தொடர்ந்து செய்து கொண்டு, இப்பாதையில் ஆர்வமுள்ள பக்தர்களை ஈர்க்கும் வகையில் செயலாற்றினார். 1981ஆம் ஆண்டின் முதற்பகுதியில் ஒருநாள் காலை நேர பூசையின்போது தேவி காட்சி அளித்து அவருக்குப் பூர்ணாபிஷேகம் செய்து சைதன்யானந்தநாத சரஸ்வதி என்றும் அவரது துணைவியாருக்கு ஞானாம்பா என்றும் பெயர் சூட்டினாள். மீண்டும் அதே ஆண்டு நவராத்திரி பூசையின் ஏழாவது இரவு விசேஷார்க்யததிலிருந்து வெளிப்பட்ட தேவி அவரது வலது உள்ளங்கையில் சங்கு ஒன்றை வரைந்தருளினாள். 1984ஆம் ஆண்டு நவாவரண பூசைக்கான விதிமுறைகளைப் பற்றி விரிவாக எழுதுமாறு பணித்தாள். ஆண்டு முழுவதும் இப்பணியில் இடைவிடாது ஈடுபட்டு இப்புத்தகத்தின் முதற்பதிப்பைத் தேவிக்குச் சாரதா நவராத்திரியின்போது சமர்ப்பித்தார்.

பல அன்பர்களுக்கு சம்ஸ்கிருத மொழிப்பயிற்சி இல்லை என்ற காரணத்தால் பூசையின் விவரங்களையும், மந்திரங்களின் உச்சரிப்பையும் அவர்கள் சரிவரக் கற்றுணர்வதற்காக திருமதி ஞானபூரணி மத்வநாத்தின் உதவியுடன் முதற்பதிப்பை மாற்றி அமைத்து விரிவுபடுத்தியுள்ளார். இப்பணியில் அவளுடைய கணவரான டாக்டர் உடுப்பி மத்வநாத், மற்றும் ஸ்ரீ ஸ்ரீகணேஷ், ஸ்ரீ கார்த்திக்,

ஸ்ரீ டான் மெக்கன்னா, ஸ்ரீ விசுத்தாவதார் பாபா (பில் தாமஸ்), ஸ்ரீ ஸ்ரீரங்கராஜ் ஸெட்லூர், ஸ்ரீ ஸ்ரீசத்யானந்தா (டாக்டர் வேணு) ஆகியோர் உவகையுடன் பங்கேற்றனர்.

ராசெஸ்டரில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பீடத்திற்கு அன்பர்கள் திரண்டு வந்து பூசைகளில் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்று மகிழ்கிறார்கள். இச்சம்பிரதாயத்தை ஒட்டின சுமார் அறுபத்தெட்டு பீடங்கள் ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இந்தியா வரை பரவியுள்ளன.

நன்றி: ஸ்ரீ வித்யா




**சேக்கிழார் விழாவிற்கு வருகை தந்திருந்த அன்பர்களில் சிலர்**



**முதற் பரிசு பெற்ற மாணவனுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும் காட்சி**

# APARTMENT FOR RENT

## PRICE, LOCATION & CONVENIENCE



**CAP REIT**

Canadian Apartment Properties
Real Estate Investment Trust

4000 LAWRENCE AVE. E
TEL: 416-724-4040
4010 LAWRENCE AVE. E
TEL: 416-724-4041
10 TUXEDO COURT
TEL: 416-289-7423
30 TUXEDO COURT
TEL: 416-289-6982
370 McCOWAN ROAD
TEL: 416-266-7025
1050 MARKHAM ROAD
TEL: 416-438-3400
215 MARKHAM ROAD
TEL: 416-267-5223
576 SCAR,GOLF CLUB ROAD
TEL: 416-431-6994
1757 / 1759 VICTORIA PARK AVE
TEL: 416-759-9977


**EXPERIENCE A BETTER QUALITY OF LIFE**

We offer a clean, well - maintained secure home for you and your family

Schools, shopping and public transit at your doorpstep

On site building managers

Large 1,2&3 between with balconies, laundry and parking available



**CAP REIT**

Visit our website at www.rent.net

**NO APPOINTMENT NECESSARY - CALL TODAY**

# புரட்டாதிச்சனி விரதம்

## இளைப்பாறிய ஆசிரியை திருமதி பவளம் சண்முகம்

இறைவனே எல்லோரையும் காத்து இரட்சிக்கிறான் என்பது எல்லாமதங்களிலும் இருந்த போதிலும், நவநாயகர் என்று சொல்லக்கூடிய நவக்கிரகங்களின் பரிபாலனம் தான் நடக்கிறதென்பதை நம் முன்னோர்களின் 'எல்லாம் அந்த கிரகம் பண்ணுகிற வேலை' என்று சொன்ன சொல் கேட்கிறது. நல்லது கெட்டது சுகம்-துக்கம் உயர்வு-தாழ்வு வறுமை போன்றவற்றை அளித்து பரிபாலிக்கிறது சனி எனலாம். சனீஸ்வரன், சனிபகவான் என்று போற்றப்படுகிறார். சூரியன் கன்னியில் வரும் மாதமாகிய புரட்டாதி, சனி விரதம் ஆரம்பம். சூரியபகவானின் புத்திரன் சனி. நல்ல கறுப்பு நிறம். தாமத குணம். ஒல்லியான சரீரம் தலையிலும் உடம்பிலும் முரட்டு முடி. இவரது தானியம் எள்ளு. துவர்ப்பு சுவை நீலகல்(இரத்தினம்). இவரது வாகனம் காகம் என்று சோதிடம் சொல்லும். சனியைப் போல் கொடுப்பாரும் இல்லை கெடுப்பாரும் இல்லை என்ற பழமொழி உண்டு. எத்தனையோ மன்னர்கள், இராச்சியங்கள், மனிதர்கள் சனீஸ்வரனால் அழிந்து ஒழிந்ததற்கு பலபல கதைளுள் ஒன்று பின்வருமாறு:

நிடத நாட்டு மன்னன் நளமகாராசன் ஒருநாள் தன் பாதங்களை கழுவும்போது புறங்கால் நனையவில்லை. அதனைச் சாட்டி நளனைப்பற்றி கொண்டான் சனி. நம்புங்கள், நளன் நாட்டை இழந்து, மனைவியுடன் கானகம் சென்று பின்பு மனைவியையும் பிரிந்து எத்தனை எத்தனை துன்பங்களை அனுபவித்தான்! இதுமட்டுமல்ல சனி 4ல் இருப்பின் சிக்கல். தொழில் மந்தம், வாகன பிரச்சினை சனி 7ல் களத்திர இடைஞ்சல். 8ல் கண்டம் குடும்பம் சிக்கல் 12ல் சஞ்சாரம் அலைச்சல் என்று ஏராளம்.

நளன் வழிபட்டு விமோசனம் பெற்ற முக்கியதிருத்தலம் திருநள்ளாறு. ஆயுள், மரணம் இரண்டிற்கும் உரியவன் சனி ஆகவே மக்கள் பல்லாண்டு காலமாக இவ்விரதத்தை அனுட்டித்து வருகிறார்கள். நெய்விளக்கு ஏற்றி தியானம் வழிபாடுகள் செய்தும், திருநள்ளாற்றுக்கு போகமுடியாதவர் மனத்தே அனைத்தையும் கண்டு காகத்திற்கு உண்ணும் முன் கூப்பிட்டு எள் சாதம் வைத்தும் வழிபடுமுறை நம் நாட்டில் உண்டு. ஒவ்வொருவரும் தாம் வழிபடு கடவுளை மனத்தே வைத்து தெய்வம் ஒன்றே என்ற சிந்தனை உடையராய் மந்திரங்களை திருப்பாடல்களை ஓதி வழிபட வேண்டும். இது ஆன்மவளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரியும். நாம் எத்தெய்வமாக வழிபட்டாலும் அத்தெய்வமாக நின்று அருள் செய்பவன் இறைவன்.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்' - சிவஞானசித்தியார்

கிரகங்களின் நிலையைக் கொண்டு வாழ்வியல் நிகழ்வுகளை ஓரளவு அறியலாம். இந்த நிகழ்வுகளுக்கு கிரகங்கள் காரணம் அல்ல. எமது வினைப்பயனின் படி அவை நிகழ்கின்றன. கிரகங்களின் இயக்கததிற்கும் இறைவனே காரணம். கோளறு பதிகத்தில் ஞானசம்பந்தர் உண்மையாக யார் ஒருவர் சிவபெருமானை உள்ளத்தில் இருத்தி வழிபடுவாரோ அவருக்கு கிரகங்கள் நல்லனவாக அமையும் என்பதே பதிகம் கூறும் வரலாறு. சிவபெருமானை பக்தியோடு வழிபடுபவர்களுக்கு கிரகங்கள் காட்டும் கறைகள் எல்லாம் நீங்குவது திண்ணம்.

இறுதியாக இறைவனையே சனீஸ்வன் பிடித்த கதை ஒன்று உண்டு. நாரதர் சனீஸ்வரரிடம் நீ இந்த உலகத்தில் எல்லாரையும் பிடித்து ஆட்டி அலைக்கிறாய். எங்கே சிவனை ஆட்ட முடியுமா என சனீஸ்வரன் சிவனைப் பிடிக்க போனான். பெருமான் எல்லாம் அறிந்தவர். இறைவனல்லவா. இறைவன் தண்ணீர் தடாகத்தில் குளித்துக் கொண்டு நின்றவர் சனிவருவதைக் கண்டு தண்ணீருக்கு அடியில் சிலநிமிடம் மறைந்து விட்டார். சனி நாரதரிடம் கைகொட்டி எங்கள் சிவனையே தண்ணீரில் அமிழ்த்தினேன் என்றால் என் நிலை அறிந்தீர்களா என்று கூறினான்.

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

**நியூ தேவி உணவகம்**

**இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்**

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

**1877 Lawrence Ave. East, Scarborough, ON**
**(Lawrence & Pharmacy)**

**Tel: 416-288-0303**

# மாதச் சிறப்புகள்

## குருபூசை நாட்கள்

| | |
|---|---|
| 03-07-2003 | மாணிக்கவாசக சுவாமிகள் |
| 04-08-2003 | சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான்பெருமான் |
| 10-08-2003 | பட்டினத்தடிகள் |
| 09-09-2003 | ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா |

## ஆடிப்பூரம்

சிவபெருமானுக்குத் திருவாதிரையும் திருமாலுக்குத் திருவோணமும் போல அம்பிகைக்கு உரிய சிறப்புத் திருநாள் பூரமாகும். பூரத் திருநாளில்தான் அம்பிகை திரு அவதாரம் செய்தாள் என்று பெரியோர்கள் கூறுவர்.

## ஆவணி மூலம்

குதிரை வாங்கச் சென்ற மணிவாசகப் பெருமானை சிவபெருமான் மானிட உருவில் குருமூர்த்தியாக எழுந்தருளித் திருவடி தீட்சை வைத்து ஆட்கொண்டருளினர். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணம் முழுவதும் கோயில் திருப்பணிக்காகச் செலவு செய்தார் மணிவாசகர். பாண்டியன் ஒற்றரை அனுப்பி மாணிவாசகரை அழைத்தபோது சிவபெருமான் ஆவணி மாத மூல நட்சத்திரத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லி அனுப்பினார்.

அவ்வாறே சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி ஆவணி மாத மூல நட்சத்திரத்தன்று மதுரை வீதியிலே கொண்டு வந்தருளினார். அன்றிரவு பரிகளெல்லாம் நரிகளாகி அட்டகாசம் செய்தன.

இத்தினத்தை இன்றும் மதுரையிலே மூலப்பெருவிழா என்று கொண்டாடி வருகின்றனர்.

## புரட்டாதி சனிக்கிழமைகள்:

20-09-2003, 27-09-2003, 4-10-2003, 11-10-2003

## நவராத்திரி விரதாரம்பம்: 26-09-2003

## சரஸ்வதி பூஜை 03-10-2003

## விஜயதசமி, கௌரி நோன்பு ஆரம்பம்: 04-10-2003

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

## சேக்கிழார் விழா


2001ம் ஆண்டு நாவலர் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சிவனடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க பெரியபுராண தொடர் சொற்பொழிவை சைவதுரந்தரர் வி. கந்தவனம் ஐயா நிகழ்த்தி வந்தார். அவருடைய சொற்பொழிவு பூர்த்தியை முனனிட்டு இரு நாட்கள் சேக்கிழார் விழாவாக நடத்துவதென இந்து சமயப் பேரவை தீர்மானித்தது. சேக்கிழார் விழாவை முன்னிட்டு பெரிய புராண மனனப் போட்டி பாலர் பிரிவுக்கும் நாயன்மார்கள் பற்றிய பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகியனவற்றுக்கு நடத்தப் பட்டன.

செப்ரெம்பர் 5ம், 6ம், திகதிகளில் நடத்தப்பட்ட சேக்கிழார் விழா மாலை 3 மணிக்கு ஆரம்பமாகியது. 5ம் திகதி திருமுறை வழிபாட்டுடனும் அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகிய விழாவில், சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் சேக்கிழாராக உருவகப்படுத்தப் பட்டார்.

திரு. செ. சோமசுந்தரம் ஆசிரியர் அவர்களின் தலைமையின்கீழ் சிவனடியார் க. கந்தையா அவர்கள் ஓதிய தேவார பாராயணத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஆலய பிரதம குரு திரு. பாலகுணானந்தக்குருக்கள், வித்துவான் கு.வி. மகாலிங்கம் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். சைவதுரந்தரர் திரு. வி. கந்தவனத்தின் பதிலுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் செப்ரம்பர் 6ம் திகதி நடத்தப்பட்ட விழாவில் சோமஸ்கந்தக் குருக்கள் (அவுஸ்திரேலியா) வரசித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு விஜயகுமாரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார். சட்டத்தரணி சிவ சிறித்ரன் வாழ்த்துரை வழங்கினார். போட்டிகளில் முதல் பரிசு பெற்ற சிறார்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன.

பேரறிஞர் முருகவே பரமநாதன் தலைமையில் பெரிய புராணம் பற்றிய கருத்துக் களமும் நடைபெற்றது. முன்னாள் பேராசிரியர் கலாநிதி



**சேக்கிழார் உருவப்படம் உள் வீதி வலம்வரும் காட்சி**



**சேக்கிழார் விழாவில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், பேரறிஞர் முருகவே பரமநாதன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்**

பாலசுந்தரம், ஆசிரியர் சத்தியமூர்த்தி, சைவசித்தாந்த மன்றத் தலைவர் தி. விசுவலிங்கம் ஆகியோர் பங்கு பற்றி தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். நடன நிகழ்ச்சியும் பண்ணிசை ஆசிரியை நவராஜகுலம் முத்துக்குமார சுவாமி அவர்களின் மாணவிகளின் பண்ணிசையும் இடம் பெற்றன.

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய பெரியார்களின்

சொற்பொழிவுகள் இரு நாட்களும் மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

சைவதுரந்தரர் வி. கந்தவனம் எழுதிய குரு வழிபாடு என்ற நூலும், சிறுவர் இலக்கியங்களான முருகப் பெருமானும் அவ்வையாரும், விநாயகப் பெருமானும் அகத்தியரும் என்ற நூல்களும் வெளியிடப்பட்டன. குருவழிபாடு என்ற நூலை ஆசிரியை திருமதி. மீனா தவரட்னம் அவர்களும், சிறுவர் இலக்கியங்களை ஆசிரியை திருமதி கோதை அமுதனும் வெளியிட்டு வைத்தார்கள்.

## திருமுறை மனனப்போட்டி

பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவை முன்னிட்டு இந்துசமயப் பேரவைத் தாபகர் ஆத்மஜோதி ஞானசுரபி முத்தையா சுவாமிகளின் ஞாபகார்த்தமாக 13-09-2003 சனிக்கிழமை 3 மணியளவில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட திருமுறை மனனப் போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட சிறார்கள் பங்கு பற்றினார்கள்.

மேற்படி போட்டிகளில் பங்கு பற்றிய சிறார்களின் தொகையைப் பார்த்த பெரியவர்கள் கனடாவில் சைவம் வாழும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்கள்.

## பன்னிரு திருமுறைப் பூர்த்திவிழா

19-04-2003 தொடக்கம் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்றுவந்த பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா 20-04-2003 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வெகுசிறப்பாக நடைபெற உள்ளன. திருமுறை முற்றோதிய சிவனடியார்களுக்கும், திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்றிய சிறார்களுக்கும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும், முருகன் புத்தகசாலை அதிபர் க. மகேசன் அவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். சிவமயச் செல்வி புலவர் சி. விசாலாட்சி அவர்களின் சிந்தனைத் தேன்துளிகள், சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களின் ஞான விளக்கு, இரசிகமணி கனக செந்திநாதனின் மூன்றாவது கண் ஆகிய நூல்களும் வெளியிடப் படும். சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

# சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம்

சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம்

சைவத் திருமுறையிலே பன்னிரண்டாவது நூலாக விளங்குவது பெரியபுராணம் எனப் போற்றப்படும் திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளியவர் சேக்கிழார் பெருமான். இவர் சென்னை பட்டினத்துக்கு அணித்தாகவுள்ள குன்றத்தூரிற் பிறந்தவர். சோழப் பேரரசன் 2ஆம் குலோத்துங் கனுக்குத் தலைமை அமைச்சராக இருந்து பணியாற்றிய பெருமையுடையவர். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பெருமான் பாடுவதற்கு ஆதாரமாக இருந்த முதல் நூல் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத்தொகை. இதனைச் சற்று விரிவாக்கி நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலை ஆக்கியருளினார். இது சேக்கிழார் பெருமானுக்கு வழிநூல் ஆயிற்று.

## வரலாற்று ஆசிரியர்

சுந்தரமூர்த்தி நாயனார் தொண்டர்களை முதன்முதலாகப் பட்டியற்படுத்திய பெருமைக்குரியவர். அவர் பதினொரு பாடல் களில் 63 தொண்டர்களின் பெயர்களையும் இரண்டொரு அடைமொழிகளால் அவர்களது பண்புகளையும் மட்டுமே கூறிச் சென்றார். இத்தகவல்களைச் சற்று விரித்துத் தொண்டர்களின் ஊர், குலம் பற்றிய விவரங்களுடன் 89 பாடல்களில் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினார் நம்பியாண்டார்நம்பி. இவர்கள் இருவரும் பதிவு செய்த தகவல்களை வைத்துக் கொண்டு மேலும் விவரங்களைத் திரட்டி அவற்றை ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிந்து தொண்டர்களின் வரலாற்றை விரித்து உரைத்த பெருந்தொண்டைச் செய்திருக்கின்றார் சேக்கிழார் பெருமான். அவர் முதல் அமைச்சராக இருந்த காரணத்தினால் வேண்டிய தகவல்களைத் திரட்டவும் அவற்றின் சரிபிழைகளை ஆராயவும் அவருக்கு வாய்ப்பும் வசதிகளும் நிறையவே இருந்தன. வாய்ப்பும் வசதிகளும் இருந்தாலும் கால இடைவெளி ஒன்று அவருக்குத் தடையாக இருந்தது என்பதனைக்

கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். சேக்கிழார் பெருமான் வாழ்ந்த காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. அப்பர் பெருமான் வாழ்ந்த காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. அவருக்கு முற்பட்டவர்கள் காரைக்கால் அம்மையாரும் கண்ணப்ப நாயனாரும். காரைக்கால் அம்மையார் காலம் மூன்றாம் நூற்றாண்டளவினதென்பர். எனவே ஏறத்தாழ 800 ஆண்டு காலப்பரப்பில் அவ்வப்போது வாழ்ந்த அடியார்களின் வரலாற்றை அறிந்து கொள்வதென்பது எளிதான செயலன்று. எனினும் தமது பதவி, அறிவாற்றல், ஆளணி ஆகிய வற்றைக் கொண்டு முடிந்த அளவுக்கு எவ்வளவு தகவல்களைத் திரட்ட முடியுமோ அவ்வளவையும் திரட்டினார். திரட்டியபின் அவற்றை ஆராய்ந்து தமக்குச் சரியனெப்பட்டதை மட்டும எடுத்துக் கொண்டார். அவ்வகையில் ஒரு சிறந்த ஆய்வாளராக விளங்குகின்றார் சேக்கிழார் பெருமான்.

தெரியாதவற்றைச் சொல்லக்கூடாது, பிழையானவற்றைப் பதிவுசெய்யக்கூடாது என்ற கொள்கையில் அவரது நேர்மைத் திறத்தையும் நாம் காண்கிறோம். நாம் வாழும் காலத்திலேயே எமது நாட்டில் சிங்கள வரலாற்று ஆசிரியர் தமிழர் வரலாற்றை மூடிமறைக்க முயல்வதைப் பார்க்கிறோம். சில பொதுவுடைமை நாடுகளிலும் வரலாறு திரிக்கப்படுவதை அந்நாட்டு அறிஞர்களே சுட்டிக் காட்டியுள்ளனர். சேக்கிழார் பெருமான் பாடவருவது திருத்தொண்டர்களை. சிவனடியார்களைப் பற்றிச் சிவனடியார் எழுதுகையில் பிழையான தகவல்கள் இடம்பெறமுடியுமா என்ன? அறுபத்து மூன்று பெரியார்களின் வரலாற்றை ஆராய்ந்து அறிந்து எழுதிய சேக்கிழார் பெருமான் தமிழர் கண்ட முதல் வரலாற்று ஆசிரியராக விளங்குகின்றார்.

## சைவக் காப்பியம்

இரண்டாவதாக, சைவசமய தத்துவங்களை விரித்து உரைக்கும் ஒரு காவியத்தை முதன்முதலாகப் பாடிய பெருமையும் சேக்கிழாருக்கே உரியதாகின்றது. சிவதொண்டர் ஒருவரை - சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கதாநாயகராக வைத்துப் பாடப்பெற்ற பத்திச் சுவைக் காப்பியம் திருத்தொண்டர் புராணம். காப்பியம் என்று சொல்கின்றபொழுது, முன்னுக்குச் சொன்ன வரலாறுபற்றிய கருத்துடன் இது முரண்படுகின்றதே என்று எண்ணத் தோன்றும்.

வரலாறு என்பது உண்மைச் சம்பவங்களோடு கூடியது. காப்பியம் கற்பனையோடு கூடியது. இவை இரண்டும் எங்ஙனம் இணைந்து போகும் என்று கேட்பவர்களுக்கு, கிடைத்த வரலாற்றுக் குறிப்புகளில் இருக்கக்கூடிய இடைவெளிகளைக் கற்பனையால் நிரப்பியிருக்கின்றார் சேக்கிழார் என்ற பதிலைச் சொல்லவில்லை. தெரியாத வரலாற்றுக் கட்டங்களைக் கற்பனையால் சிவனடியே சிந்திக்கும் சிவஞானி ஒருவர் வருவித்திருக்கமாட்டார்.

வரலாற்றைச் சுவைபடச் சொல்வதற்கு அவர் கையாண்ட உத்திமுறைகளிலேயே அவரது கற்பனைத்திறம் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. உதாரணமாக, தொண்டை நாட்டில் வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டநாயனார் வரலாற்றைப் பாடுகையில் மருதநிலத்தை இவ்விதம் வருணிப்பதைக் காண்கிறோம்:

> பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
> மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
> வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந்து ஏறிப்
> பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி.

'பிள்ளைகள் தமது பிஞ்சுக் கைகளால் தடவிய அளவிலேயே பெருகிப் பாலைச் சொரிகின்ற முலைகளையுடைய தாயைப்போல உழவர்கள் வேனிற் காலத்திலே பாலி ஆற்றின் மணலைத் தோண்டினால் நீர் பெருகி வாய்க்கால்களின் வழியோடிப் பக்கத்துத் தாழ்நிலங்களில் உள்ள வயல்களை எல்லாம் நிரப்பி அவற்றின் வரம்புகளை உடைக்கும்' என்கின்றார் சேக்கிழார்.

இது கவிநயக் கற்பனை என்றாலும் பாலி 'ஆற்று நீர் வயல்களில் தேங்குவதும் வரம்புகளை உடைப்பதும் நடந்திருக்கக்கூடிய இயற்கை நிகழ்ச்சியல்ல என்று யாராவது சொல்வார்களா? கற்பனைகளும் வருணனைகளும் காப்பியத்துக்கு இன்றியமை யாதன. கம்பரது கற்பனைகளோடு ஒப்பிடுகையில் சேக்கிழாரின் கற்பனைகள் மிக இயல்பானவையாகவும் அளவானவையாகவும் இருப்பதைக் கண்டு இன்புறலாம்.

## தொண்டர் பெருமை

சைவ சமயத்தை ஒரு தொண்டுச் சமயமாக, தொண்டர் நெறியாக

நிலைநிறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான். தொண்டர்களின் வாழ்க்கை சாதாரண வாழ்க்கையன்று. பத்தியும் பரவசமும் வீரமும் தீரமும் அற்புதமும் நிறைந்த தொண்டு வாழ்க்கை.

அவர்கள் அகிலகாரணர் தாள்பணிந்தவர்கள்; அவரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்; அன்பினால் மெய்தழைத்தல், விதிர்ப் புறுதல் போன்ற பரவச வாழ்க்கை வாழ்ந்தவர்கள்; கைத்திருத் தொண்டு செய்வதைக் கடமையாகக் கொண்டவர்கள்; பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்; தேசினால் எத்திசையும் விளக்கியவர்கள்; பேசுதற்கு முடியாத பெருமை மிகுந்தவர்கள்; பூதம் ஐந்தும் நிலையில் மாறுபட்டாலும் மாதோர் பாகனை மறவாது வணங்கும் காதல் நெறியில் கலங்காது நின்றவர்கள்; குற்றமில்லாத குணக்குன்றுகளாக விளங்கியவர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறை விலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

என்றெல்லாம் தொண்டர்களின் இயல்புகளையும் பெருமைகளையும் திருக்கூட்டச் சிறப்பிலே எடுத்துக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

கூடும் அன்பு, ஈர அன்பு என்னும் சொற்றொடர்களைக் கவனித்தல் வேண்டும். பெரிய புராணம் ஓர் அன்புக் கடல் என்பார் திரு.வி. கலியாணசுந்தரனார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் போற்றுகின்றார். இந்தச் சுவையை மிக அற்புதமாகவே சொட்டுகிறது இப்பாடல்:

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
        அளப்பரும் கரணங்கள் நான்கும்

சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் கடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

நம்பியாரூரர் இறைவனை வணங்கும் காட்சி இது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

## முப்பொருள் உண்மை

மாறிலா மகிழ்ச்சி - 'இறவாத இன்ப அன்பு'. இன்ப அன்பு வாழ்க்கைக்கு வழிகாட்டுவதே சேக்கிழார் பெருமானின் நோக்கம். அதனால் இன்ப அன்பு வாழ்க்கைக்கு ஆதாரமான கடவுள், உயிர், உலகு ஆகிய மூன்று பற்றியும் காப்பியத்திலே பேசுகின்றார். இவை முறையே பதி, பசு, பாசம் எனப்படும். இவை சைவசித்தாந் தத்தின் முப்பொருள் உண்மைகள்.

பசு பதிமீது கொள்ளும் உயர்ந்த அன்பு பத்தி எனப்படும். இது பிற தரும, ஞான, யோகங்களிலும் உயர்ந்தது. பத்தி 11 வழிகளில் வெளிப்படுகிறது என்று 'நாரத பத்தி சூத்திரம்' கூறுகின்றது. அவை பின்வருமாறு:

1. இறைவனின் கல்யாண குணங்களைப் புகழ்தல்
2. அவனுடைய முருகியல் அழகில் ஈடுபடுதல்
3. அவனை வழிபடுவதில் இன்பங் காணல்
4. அவனை ஓயாது நினைத்தல்
5. அவனுக்குத் தொண்டு செய்தல்
6. அவனை நண்பனாக நினைத்தல்
7. அவனைத் தந்தையாக நினைத்தல்
8. அவனைக் கணவனாக நினைத்தல்
9. அவனிடம் தன்னை முற்றாகத் தியாகம் செய்துவிடல்
10. அவனிடமே முழுவதுமாக அமிழ்ந்துவிடல்
11. அவனைப் பிரிய நேர்ந்தால் அதற்காகப் பெரிதும் வருந்துதல்

இக்கருத்துக்கள் திருத்தொண்டர்களின் பத்திநிலைகளோடு நன்கு ஒத்திருப்பதைக் காணலாம். சைவ சமயம் அன்பு நெறி என்பதனை மிக அழுத்தமாகவே வலியுறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

## மேன்மைகொள் சைவ நீதி

அன்பை இறைவனிடம் மட்டும் செலுத்தினால் போதாது. எல்லா உயிர்களிடத்தும் செலுத்த வேண்டும். இது மேன்மை கொள் சைவநீதியின் கட்டளைகளில் ஒன்று. உயிர்களிடத்தில் அன்பு வைத்திருந்தால் அவைகளைக் கொல்ல அந்த அன்பு விடாது. எனவே கொல்லாமை சைவநீதியின் அடுத்த கட்டளையாகின்றது. இந்த நீதியைக் காப்பியத்தின் ஆரம்பத்திலேயே திருவாரூர்த் திருநகரச் சிறப்பில் நிலைநாட்டி விடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

மனுநீதிச் சோழன் மகன் - ஒரே மகன் அரச வீதியில் தேரின் மீது செல்கையில் பசுக்கன்று ஒன்றைத் தெரியாமல் கொன்று விடுகிறான். கன்றினை இழந்த பசு தாங்கொணாத் துயரத்துடன் ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் அசைத்து அடிக்கிறது, நீதிகேட்டு.

மனுநீதிச் சோழன் நடந்ததை விசாரித்து அறிந்து அமைச்சர் ஒருவரை அழைத்து பசுக்கன்றைக் கொன்ற தன் மகனை அதே வீதியிலே தேர்க்காலினில் வைத்துக் கொல்லும்படி கட்டளை யிடுகிறான். அமைச்சர் அக்கட்டளையை நிறைவேற்ற மனமில்லாது தனது உயிரைப் போக்கிக் கொள்கிறார். அதுகேட்ட சோழன் தனக்கு ஒரேயொரு மகன்தான் உள்ளான் என்பதைக்கூட எண்ணிப்பாராது, தன் மகன்மீது தானே தேரைச் செலுத்திக் கொன்றான். சேக்கிழார் பாடுகின்றார்:

ஒருமைந்தன் தன்குலத்துக்கு
        உள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன்வழிச் செய்கை
        கடன் என்று தன்மைந்தன்
மருமம் தன்தேர் ஆழி
        உற ஊர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி
        அரிதோ மற்று எளிதோதான்.

இத்தகைய நீதியோடு கூடிய ஆட்சியை நடத்துவது என்பது எளிதன்று. சிவதருமத்தில் நிற்கும் சிவசிந்தனையாளருக்குத்தான் அது கைகூடும்.

இன்று உலகத்திலே இலங்கை உட்பட எத்தனையோ நாடுகளில் அரச கொடுமைகள் நடந்து வருவதைப் பார்க்கின்றோம். அவர்களுக்கெல்லாம் இந்த மனுநீதிச் சோழன் வரலாறு தெரியுமோ என்னவோ? தெரிந்த தமிழ்நாட்டில்தான் என்ன நடக்கிறது?

உண்மையில் உலகம் முழுவதிலும் நீதிபரிபாலனம் நடக்க வேண்டும் என்பதே சேக்கிழாரின் நோக்கம் - பரந்த நோக்கம். அதனாலேயே அவர் 'உலகெலாம்' என்று தமது காப்பியத்தைத் தொடங்கி 'உலகெலாம்' என்று நிறைவு செய்கின்றார். சைவர்கள், தமிழர்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் தழைத்தோங்க வேண்டும் என்பது அவரது சிந்தனை. நீதி வழுவா நெறிமுறையில் நின்று நிலைத்தோங்க வேண்டும் என்பது அவரது பெரு விருப்பம்.

## கடிதம்

அன்புள்ள 'ஆத்மஜோதி' ஆசிரியருக்கு

'ஆத்மஜோதி' இதழ்கள் ஒழுங்காகக் கிடைத்து வருகின்றன.போதிநாத வேலன் சுவாமிகளின் சைவ சித்தாந்தம் பற்றிய கட்டுரை சிறப்பாக அமைந்திருக்கிறது. மேலைத் தேசத்தவராக இருந்தாலும் எமது சமய சித்தாந்தங்களை மிகவும் நுணுக்கமாக விளக்கி இருப்பது அவரின் சமய ஈடுபாட்டிற்குச் சான்றாக விளங்குகிறது. தனது குருவின் மேலும் குருவினது குருவாகிய யோக சுவாமிகள் மீதும் அவர் கொண்டுள்ள மேலான பக்தி கட்டுரையில் பளிச்சிடுகிறது. அமெரிக்க நாட்டில் இந்துமத இயக்கங்கள் பலவற்றின் செயற்பாடுகள் மலிந்திருந்தாலும் ஸ்ரீ இராம கிருஷ்ணர், விவேகானந்தர் பெயரில் நடைபெறும் சங்கங்களும், குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகளின் அமைப்புமே நன்கு நடைபெறுவனவாகத் தெரிகிறது. சமூகத் தொண்டர் வி. கதிரவேலுப்பிள்ளை, பேரறிஞர் விபுலானந்த அடிகள் பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் 'சந்நதிக்கு நடந்தேன்', 'நகுலேஸ்வரம்', மற்றும் திருவாதவூரடிகள் புராணம் பற்றிய தொடர் கட்டுரைகளும் பயன்மிக்கனவாகும். பன்னிரு திருமுறைகளின் முற்றோதல் நிகழ்ச்சி பற்றிய அறிவித்தலும் எம்மை வியப்பும் மகிழ்ச்சியும் அடையச் செய்கின்றன. சைவப் பெரியார் ஞானசூரியர் அவர்களின் மறைவு எல்லாருக்கும் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

தெகிவலை, இலங்கை
26-08-2003

க. இராமநாதன்

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

## திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம்

1 மக்கள் அனைவரும் கருதுவதும் விரும்புவதும் நாடுவதும் தேடுவதும் இன்பம் ஒன்றே. ஆனால் அவ் இன்பத்தை எவ்வாறு அடைவது என்பதை அறிய முடியாது தவிக்கின்றனர்.

2. இன்பம் என்பது வெளிப்பொருள்களில் இருந்துவருவது அன்று. அது அகத்தில் இருந்து (உள்ளத்தில்) தோன்ற வேண்டும்.

3. சிறுபொழுதே இருக்கக்கூடிய இன்பம் சிற்றின்பம் ஆகும். எப்போதும் நிலைக்கக்கூடிய இன்பம் பேரின்பம் ஆகும்.

4. இன்பம் வரும்போது தலைகால் தெரியாமல் துள்ளுவதும், துன்பம் வரும்பொழுது மனமொடிந்து போவதும் மனித சுபாவம். இரண்டையும் சமமாகப் பாவிக்கமனத்தைப் பழக வேண்டும்.

5. மனித வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த குறிக்கோள் இருக்க வேண்டும்.

6. நமது வாழ்க்கையின் குறிக்கோள் உயர்ந்ததாக அமைய வேண்டும். அதை அடைய இடையறாது முயல வேண்டும். உள்ளத்தில் அன்பை வளர்த்து ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும்.

7. மக்களுக்காக கோயில்கள் நடத்தப்படுமானால் கோயிகளுக்காக மக்கள் வாழ்வர்.

8. சமயமும் சமுதாயமும் ஒன்று. சமயப்பணியும் சமுதாயப் பணியும் ஒன்றுதான். இதனை ஏட்டளவில் வைத்துக் கொள்ளாமல் செயலில் காட்ட வேண்டும்.

9. இன்று உலகம் முழுவதிலும் பணிவுக்கும் அன்புக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதனால் பணிவையும் அன்பையும் மக்கள் மத்தியிலே நினைவூட்டி மக்களை சீலம் நிறைந்தவர்களாக வாழவைக்க வேண்டியது சான்றோர்களின் கடமையாகும்.

10. இளையவர்கள் முதியவர்களிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என்பதும் முதியவர்கள் இளையவர்களுடன் இன்புடையவர்களாக இருக்க வேண்டும் என்பதும் தொன்று தொட்டு வந்த மரபாகும்.

11. தங்கள் பிழையை ஒப்புக் கொள்ள யாரும் தயாராக இல்லை. எல்லோரும் குருவாக இருக்கவே விரும்புகின்றார்கள். சீடனாக இருக்க எவரும் விரும்புவதில்லை.

12. பணிவின்மைக்குக் காரணம் அகங்காரம். அன்பின்மைக்கு காரணம் சுயநலம். அகங்காரமும் சுயநலமும் படிப்படியே தேயத்தேய பணிவும் அன்பும் வளர்ந்து வரும்.
13. இருளில் இரண்டு வகை. அவை அக இருள் புற இருள் என்பன. சூரியன் சந்திரன் அக்கினி என்பன புற இருளைப் போக்குவன. குரு ஒருவரால்தான் அக இருளைப் போக்க முடியும்.
14. அகங்காரம் பல உருவிலே வரக்கூடும். பணத்தினால் பட்டத் தினால் பதவியினால் கல்வியினால் பலத்தினால் அழகினால் குலத்தினால் இப்படி எத்தனையோ வழிகளால் அது தலை எடுக்கும். இவற்றினால் உண்டாகும் செருக்கு அழிய வேண்டுமென்றால் இறைவன் கருணையை நாட வேண்டும்.
15. சுயநலம் தேய தியாக உணர்வு உண்டாகிறது. அன்பின் முதிர்ச்சி அருள். அருள் பழுத்த உள்ளத்திலே தான் தியாகம் உண்டாகிறது.
16. பணிவு இல்லாமையினாலே மரியாதையும் இல்லாமல் போகின்றது. பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையும் குறைந்து கொண்டே வருகின்றது. தன்னைப்போல பிறரை நேசிக்கும் பழக்கமும் அருகி வருகின்றது.
17. அகங்காரத்தினால் சுயநலமே வளர்ந்து வருகின்றது.
18. குழந்தைகளின் உள்ளத்திலே பணிவையும் அன்பையும் வளர்த்தால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகள் ஆக வாழ்வார்கள்.
19. இறைவனது திருவருள் நமது கண்ணுக்குப் புலனாகாமல் நம்மை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது.
20 சிவனடியார்களின் பெருமையை சிவனடியார்களால் தான் அறிய முடியும்.
21. மொழி ஓர் இனத்தின் உயிர் போன்றதாகும். மொழி அழிந்தால் அம்மொழி பேசுகின்ற இனமும் அழிந்து போகும்.
22. அருளரசராகிய சுந்தரரையும் புவியரசராகிய சேரமானையும் ஒன்றுபடச்செய்த பெருமை சிவபெருமானின் பாதச் சிலம்பொலிக்குரியதாகும்.
23. அண்டசராசரங்கள் அனைத்தையும் தன்அருள் நிலையில் வைத்து ஆள்பவனும் அவற்றைக் கடந்து விளங்குபவனுமாகிய எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளின் அருளையே எல்லா மதங்களும் நாடி நிற்கின்றன.

**இறுக்கமான சூழலில்**
**ஓர் இலகுவான தீர்வு!**

காப்புறுதி, குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம், ஓய்வூதிய சேமிப்புத் திட்டம் அனைத்துக்கும்

**ஒரு நம்பிக்கையான நிறுவனம்**

**வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி**

40-80 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும்

எங்கள் இலகுவான ஈட்டுக்கடன் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப அடமானக் காப்புறுதியைத் தெரிவு செய்து கொள்ளலாம்

பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய சேமிப்புத் திட்டம் **R.R.S.P.**

**உங்கள் சகல காப்புறுதி மற்றும் RRSP, RESP தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**



**ஸ்ரீதரன் துரைராஜா**

**SRITHARAN THURAIRAJAH**

**416-918-9771**

ISSN 1703-9185


# முருகன் புத்தகசாலை

## உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்று ச் சேவை

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH,**
**ONTARIO, M1P 2X8, CANADA.**

**TEL : (416) 285-9118**

## உங்களுக்குத் தேவையான அனைத்து

## அச்சுத் தேவைகளுக்கும்


# விவேகா அச்சகம்

பற்பல வடிவங்களில் பலவர்ண அச்சு வேலைகளுக்கும்
அரங்கேற்றப் புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள்

Wedding Cards, Wedding Bags, Cake Boxes, Business Cards,
Letter Heads, Flyers, Invoices, Books,

மற்றும் சகல விதமான அச்சுத்தேவைகளையும் மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies




80 Barbados Blvd., Unit 4
Scarborough, ON
Tel : (416) 410-6401